# உதயன்

விலை ரூபா 7.00

வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 16 சனிக்கிழமை (01-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:279


# நேற்று நள்ளிரவு வரையும் பொ.ஐ.மு.-ஜே.வி.பி. பேச்சு!

## முடிவு காலையில் வெளியாகும்

கொழும்பு,செப்ரெம்பர் 1

...ாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ள தமது பொதுமக்கள் ...ப முன்னணி அரசுக்கு, நாடாளுமன்றத்தில் போதுமான ஆதரவைத் ...ம் நோக்கத்துடன் ஜே.வி.பி. கட்சியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரது...வும் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவும் நேற்று நள்ளிரவு வரை ...ப் பேச்சுக்களை நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் பெறுபேறு அநேக இன்று காலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

...து சில நிபந்தனைகளை அர...பு ஏற்றுக்கொள்ளுமானால் ...ரண்டு காலத்துக்கு 'தகுதி ...ரசு' என்ற நிலையில் இந்த ...ட்சியில் நீடிப்பதற்கு அர...வெளியில் இருந்து கொண்டு ...தரலாம் என்று ஜே.வி.பி. கூறியிருப்பது தெரிந்ததே.

ஜே.வி.பி. விதித்துள்ள நிபந்தனைகள் தொடர்பாக அக்கட்சியுடன் பேசி, ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் இறுதிக்கட்ட முயற்சியாகவே ஜனாதிபதியும், பிரதமரும் நேற்று இரவிரவாக அக்கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர்.

ஜே.வி.பி. தரப்பில் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவும் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் மா அதிபரின் மகன் திருமண நிகழ்வு: 50 உயர் பொலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு கோடி ரூபா செலவில் சீருடைகள்!

கொழும்பு,செப்.1

• பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கின் மகனும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகருமான றன்மல் கொடித்துவக்கின் அண்மையில் நடந்த திருமண நிகழ்வில் பங்குபற்றிய பொலீஸ் அணிக்கு சம்பிரதாயபூர்வ உடைகளை வழங்க ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து பொலீஸ் வட்டாரங்களில் பெரு வியப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இணையத்தளச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தர நிலைக்கு மேற்பட்ட பொலீஸ் அதிகாரிகளின் சீருடைகளை மாற்றும

(2ஆம் பக்கம் பார்க்க)

## ...சியல் நெருக்கடி நிலை குறித்து ...திரணி தலைவர்கள் திங்கள் சபாநாயகருடன் பேசுவர்

கொழும்பு,செப்.1

...ாலதைய அரசியல் நெருக்...ை தொடர்பாக சபாநாயகர் ...ண்டாரநாயக்கவுடன் எதிர்க் ...தலைவர்கள் நாளை மறு...ங்கட்கிழமை பேச்சுக்களை ...ள்ளனர்.

...லும் 7 ஆம் திகதி நாடாளு...கூடும் பட்சத்தில் அன்றைய ...டில் இடம்பெறவேண்டிய ...கள் குறித்தும் சபாநாயகரு...திக்கட்சித் தலைவர்கள் கலந்துரையாடுவார்கள் என்றும் தெரியவருகிறது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செல்லும் குழுவில் சகல எதிரணிக்கட்சிகளின் தலைவர்களும் இடம்பெறுவர்.

அதேவேளை -

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் அன்று பிற்பகல் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவிருக்கின்றது. (க-3-4)

## ஸ்ரீ.ல.சு.கட்சியின் கைச்சின்னத்தை கைப்பற்ற அதிருப்திக் குழு முயற்சி?

கொழும்பு,செப்.1

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இயங்கும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முரண்பாடு கொண்டுள்ள - அதிருப்திக் குழு கட்சியின் கைச்சின்னத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையத்தள செய்தி நிறுவனம் ஒன்று இது குறித்துத் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கருத்து முரண்பாடு கொண்டிருக்கும் அமைச்சர்களான எஸ்.பி. திஸநாயக்கா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரை அழைத்து சமரசம் செய்துகொள்ளுமாறு சில அமைச்சர்களும் பொ.ஐ.மு. முக்கியஸ்தர்களும் ஜனாதிபதியை வற்புறுத்தி வருகின்றனர்.

ஆனால் தம்மைக் கைவிட்டு, தமக்கு எதிராக மோசமாகச் செயற்பட்ட இந்த இரு அமைச்சர்களுடனும் முகம்கொடுத்தும் பேசக் கூடத் தாம் தயாரில்லை என்று ஜனாதிபதி அடித்துக் கூறிவிட்டதாகத் தெரிகின்றது.

அமைச்சர்கள் மஹிந்த விஜயசேகர, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பிரதி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா போன்றோரையும் தாம் சந்திக்கப்போவதில்லை என்று ஜனா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ...லங்கா கடற்படை சுட்டதில் தமிழக மீனவர்கள் படுகாயம்

### இருவர் ஆபத்தான நிலையில்!

சென்னை,செப்.1

...ராமேஸ்வரம் கடல் எல்லைப் ...தியில் மீன்பிடித்துக் கொண்டி...ந்த மீனவர்கள் மீது இலங்...கைக் கடற்படையினர் துப்பாக்கிப் ...ரயோகம் செய்ததில் 5 மீனவர்கள் ...காயமடைந்தனர் என்று இராமேஸ்...வர மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 29 ஆம் திகதி புதன் கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த 5 மீனவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-7-4)

## அரச மரியாதைகளுடன் மூப்பனாரின் பூதவுடல் தகனம்

சென்னை,செப்.1

நேற்றுமுன்தினம் சென்னையில் காலமான தமிழ்மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.மூப்பனாரின் பூதவுடல் நேற்று மாலை சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் முழு அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது.

மூப்பனாரின் இறுதியாத்திரையிலும் இறுதிக்கிரியையிலும் சகல கட்சிகளையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான அரசியல்வாதிகளும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர். (க-7)

## 5 தமிழ் எம்.பிக்களை கொல்லச் சதி முயற்சி!

### மகேஸ்வரன் எம்.பி. திடுக்கிடும் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.1

'சங்கிலியன் படை' என்ற பெயரில் பிரசுரத்தை வெளியிட்டுவிட்டு-

குடாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பிக்கள் ஐவரையும் படுகொலை செய்து, அந்தப் பழியை புலிகள் மீது சுமத்துவதற்கு ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழு ஒன்று முயற்சி செய்திருப்பதாக, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

"இந்த நோக்கத்துக்காகவே, தனது கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகம் ஒன்றின் மூலம் 'சங்கிலியன் படை' என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட வைத்துள்ளது அந்தக் குழு.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ...வுனியாவில் 270 வீடுகளுடன் ...ன் குடியேற்றக் கிராமம்

### ...ஸ் திங்கள் திறந்துவைப்பார்

வவுனியா,செப்.1

...ாவில் மூன்றாவது மீன் ...கிராமத்தை நாளை மறு...ங்கட்கிழமை அமைச்சர் ...ளவானந்தா திறந்து வைப் ...எனத் தெரிவிக்கப்படுகின்றது. ...பல இடங்களில் இருந்தும் ...ம்ந்து வவுனியா நகரில் ...ந்தும் அகதி மக்களே இவ் ...குடியேற்றக கிராமங்களில குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே தரணிக்குளம், சுந்தரபுரம் ஆகிய பகுதிகளில் இரண்டு மீன் குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது மறவன்குளத்தில் 270 வீடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் மூன்றாவது கிராமத்தை அமைச்சர் டக்ளஸ் திறந்துவைப்பார் எனத் தெரிகின்றது. (உ-164)

## சோரன்பற்றில் 'கிபிர்' தாக்குதல்

கொழும்பு,செப்.1

ஆனையிறவுக்கு வடக்கே ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பளை சோரன்பற்றுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இரு 'கிபிர்' விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நாவற்குழிப்பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட தேடுதலில் இரு ரி-81 மோட்டார்க் குண்டுகள் மீட்கப்பட்டன என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (க-3)

## இலங்கை இனப்பிரச்சினை; டில்லியில் இருநாள் மாநாடு

புதுடில்லி,செப்.1

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான மாநாடு ஒன்று இன்றும் நாளையும் புதுடில்லியில் நடைபெறும்.

இந்திய அரசின் அனுசரணையுடன் பாதுகாப்பு மற்றும் கொள்கைகள் பகுப்பாய்வு நிலையம் இந்த மாநாட்டை ஒழுங்கு செய்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.பி.டி.பியின் ஆலோசகர் கலாநிதி எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் உட்பட சுமார் 10 பேர் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து புதுடில்லி சென்றுள்ளனர்.

இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் சரித்திரபூர்வமான முரண்பாடுகள், இணக்கப்பாடுகள் என்பன தொடர்பாக ஆய்வுரைகளும் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும். (க-7)

...ளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதாகி யாழ் சிறையிலுள்ள கைதிகளைப் பார்வையிட உறவினர்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்க மறுக்கக் கூடாது

## பொலீஸ் பொறுப்பதிகாரிகளுக்கு நீதிவான் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் பார்வையிடுவதற்கான அனுமதிக்கடிதங்களை வழங்கப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மறுக்கக்கூடாது.

இவ்வாறு யாழ்குடாநாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார் யாழ்நீதிவான் ஆ.ரி.விக்னராஜா.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சிதம்பரன் வசந்தி என்பவர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது சகோதரனான சிதம்பரன் அருணன் என்பவரைப் பார்வையிட கோப்பாய்ப் பொலீஸார் அனுமதிக் கடிதம் வழங்கப் பின்னடித்ததாகவும் -

எனவே தனது சகோதரனைப் பார்வையிட நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதையடுத்தே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடவும், அவர்களுடன் உரையாடவும் உள்ள அடிப்படை உரிமையை நடைமுறைப்படுத்தவேண்டியது நீதிமன்றத்தின் கடமை.

இதனடிப்படையில் யாழ்குடாநாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகள் குறித்த அனுமதிக் கடிதங்களை வழங்கப் பின்னிற்கக்கூடாது.

அனுமதிக் கடிதம் கொடுக்க மறுப்பதற்கு யாதேனும் காரணம் இருப்பின் அது தொடர்பான விவரத்தைப் பொலீஸ் பொறுப்பதிகாரிகள் நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் நீதிவான் தனது உத்தரவில் தெரிவித்தார். (க-7-6)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்டபேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். கோப்பாய் தோட்ட சனசமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆறு பேர் கொண்ட பத்து ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 52 அணிகள் கலந்துகொள்கின்றன. இறுதிப்போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (க-7)

## கடற்படை மாலுமி காயம்

கொழும்பு,செப்.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலைக் கடற்பரப்பில் கடந்த 28 ஆம் திகதி காலை கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நடந்த மோதலில் கடற்படை மாலுமி ஒருவர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (க-3)

## பால்மா விலை அதிகரிப்பைக் கண்டித்து கொழும்பில் நேற்று தாய்மார்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு,செப்.1

பால்மாவகைகளின் விலை அதிகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் தாய்மார்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

பால்மாவின் விலை அதிகரிப்பினால் குழந்தைகள் போஷாக்குக் குறைந்தவர்களாக மாறி வருகின்றனர்.

எனவே குழந்தைகளின் போஷாக்கையும் அவர்களின் எதிர்கால ஆரோக்கியத்தையும் கருத்தில் கொண்டு அரசாங்கம் உடனடியாக பால்மாவின் விலையைக் குறைக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தாய்மார்கள் விலை அதிகரிப்புக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பதாகைகளைத் தாங்கியிருந்ததுடன் எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பினார்கள். (க-4)

## மன்னாரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் 12 பேர் தொடர்ந்து தடுத்துவைப்பு

மன்னார்,செப்.1

மன்னாரில் பல்வேறு சம்பவங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 12 தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக இவர்களது உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்துள்ளதாகவும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த கந்தனம் - சுதர்(வயது 26) என்பவர் கடந்த 28ஆம் திகதியும்

அதேயிடத்தைச் சேர்ந்தவர்களான சுப்பையா - காந்தன் (வயது 54), தம்பிராசா செல்வரத்தினம் (வயது 29) ஆகியோர் கடந்த 29ஆம் திகதியும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-4)

## ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு பொலீஸார் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் ஓ - பொசிடிவ் (O.Positive) குருதிக்கு பற்றாக்குறை நிலவியதை அடுத்து யாழ் பொலீஸ் நிலையப் பொலீஸார் இரத்த தானம் வழங்கியுள்ளனர்.

யாழ்.பொலீஸ் தலைமையக பொலீஸ் அத்தியட்சகர் என்.சி.குடாஹெட்டியின் விசேட பணிப்புரைக்கமைய 8 பொலீஸாரினால் 8 பைந் இரத்தம் வழங்கப்பட்டுள்ளது.

பொலீஸார் வழங்கிய இரத்தம் உடனடியாகவே நோயாளி ஒருவருக்கு ஏற்றப்பட்டதால் அவர் உயிராபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரத்த வாந்தி நோயினால் பாதிக்கப்பட்ட நல்லூர் நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியரான ஏகாம்பரம் உமாகாந்தன் என்பவருக்கே பொலீஸார் வழங்கிய இரத்தம் ஏற்றப்பட்டது. இவருக்கு ஐந்து பைந் இரத்தம் ஏற்றப்பட்டது. (ஜ-9-15)

## வவுனியாவில் கைதான மூவர் குறித்து முறைப்பாடு

வவுனியா,செப்.1

வவுனியாவில் கடந்த சில தினங்களாகக் கைது செய்யப்பட்ட மூவர் குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி சந்தனம் சுதா (வயது 26 - நெளுக்குளம்) என்பவரும் -

கடந்த 29 ஆம் திகதி சுப்பையா காத்தான் (வயது 54 - நெளுக்குளம்), தம்பிராசா செல்வரத்தினம் (வயது 26 - சாஸ்திரிகூழாங்குளம்) ஆகியோரும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-3)

---

### 5 தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தக் கொலைகள் மூலம் பிரஸ்தாபக் குழுவினர் அரசியலை ஊடாட்டக் களமாக்க கற்பனை செய்துள்ளனர்.

"எம்மைக் கொலை செய்து விட்டு அப்பழியைப் புலிகள் மீது போட்டு, மக்கள் மத்தியில் புலிகள் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்துவதே அக்கட்சியின் நோக்கம்.

"ஆனால் சங்கிலியன் படையின் பெயரில் பிரசுரப்படுத்தப்பட்ட அந்தத் துண்டுப்பிரசுரத்துக்கும் தங்களுக்கும் தொடர்பேதும் இல்லை என்று நேர காலத்துடனேயே புலிகள் அறிவித்துவிட்டதால் புலிகள் மீது பழிபோடும் அவர்களது முயற்சிக்கு ஆப்பு வைக்கப்பட்டுவிட்டது.

"எம்மைக் கொலை செய்வதன் மூலம் தற்போது கனிழும் நிலையிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கலாம் என அக்கட்சி கனவு காண்கின்றது. இந்தப் படுகொலை முயற்சிக்கான பொறுப்பு அக்குழுவின் உறுப்பினரான சிறி என்பவரிடம் அக்கட்சித் தலைமையால் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தெரியவந்துள்ளது.

"பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட ஓராண்டு முடிவடைவதற்குள் தமிழ் மக்களுக்கென குரல் கொடுக்கின்ற இன்னொருவரையும் படுகொலை செய்ய வேண்டும் என்பதிலும் இக்குழு மும்முரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

"இத்தகைய படுபாதகச் செயல்களுக்குத் துணைபோகும் ஊடகம் குறித்து சகல உள்ளூர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய இருக்கின்றேன்" - இப்படி தி.மகேஸ்வரன் எம்.பி. மேலும் தெரிவித்திருக்கின்றார். (உ)

---

### ஸ்ரீ.ல.சு.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி சந்திரிகா குறிப்பிட்டிருக்கின்றார்.

இது, அடுத்த தேர்தலில் இவர்களுக்கு பொ.ஐ.முன்னணி பட்டியலில் வேட்பாளர் நியமனம் கிடைக்காது என்பதையே வெளிப்படுத்துவதாக அந்த முன்னணியின் முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர்.

இதேசமயம் -

இந்த அதிருப்திக் குழுவினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் சின்னமான கைச்சின்னத்தை கைப்பற்றி, கட்சியின் பெயரில் - கைச்சின்னத்தில் - அடுத்த தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டு வருவதாகவும் தெரிகின்றது.

அதிருப்திக் குழுத் தலைவர்களுள் ஒருவரும் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக இருப்பது அக்குழுவுக்கு சாதகமான அம்சம் என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் கடந்த பொதுத் தேர்தல்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து அதன் கதிரைச் சின்னத்தில் - பொது வேட்பாளர் பட்டியலில் - போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிருப்திக் குழுவுக்கு மேலும் பல பிரதி அமைச்சர்களின் ஆதரவு உள்ளது என்று அந்த இணையத்தளச் செய்தி தெரிவித்தது. (உ)

---

### 50 உயிர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலம் வந்துவிட்டது எனத்தெரிவிக்கும் சுற்றறிக்கை ஒன்று இந்தத் திருமணத்துக்கு இரண்டு மாதத்துக்கு முன்னர் விடுக்கப்பட்டது.

அதன் பின்னர் விநியோகிக்கப்பட்ட புதிய சம்பிரதாயபூர்வ சீருடையுடன் ஐம்பது பொலீஸ் அதிகாரிகள் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற இந்தத் திருமண நிகழ்வில் பங்கு பற்றினர். திருமணத்துக்கு சாட்சி ஒப்பத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இட்டார்.

இந்த வைபவத்தில் பங்கு பற்றிய பொலீஸ் அணியின் சம்பிரதாயபூர்வ சீருடைக்கு சுமார் ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

லண்டன் வில்கின்ஸன் நிறுவனத்திடமிருந்து ஒவ்வொன்றும் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஐம்பது புத்தம்புதிய - தங்க முலாம் பூசப்பட்ட - 'ஸ்ரெயின்லெஸ் ஸ்டீல்' ரகத்தில் செய்யப்பட்ட - ஐம்பது வாள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தொப்பிகள், பெல்ட் (பட்டி) போன்றவை தவிர்ந்த சீருடைக்கு மட்டும் தலா எண்ணாயிரம் ரூபா செலவாகியுள்ளது.

ஒரு முழுச் சீருடை 'செட்'டுக்கு இரண்டு லட்சம் ரூபா செலவாகியுள்ளதாகத் தெரிகின்றது.

சாதாரண பொலீஸாருக்கு பல வருடங்களாக பெனியன், சப்பாத்து, காலுறை போன்றவற்றை வழங்காத நிலையில், இவ்வாறு ஐம்பது சம்பிரதாயபூர்வ சீருடைக்கு ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

- இப்படி இந்த இணையத் தளம் மேலும் தெரிவித்தது. (உ)

---

### நேற்று நள்ளிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களில் பங்குபற்றினர்.

நேற்றிரவு 9 மணிவரை முதல் சுற்றுப் பேச்சு இடம்பெற்றது.

சிறிய இடைவெளிக்குப் பின்னர் ஆரம்பமான இரண்டாவது சுற்றுப்பேச்சில் அரசுத்தரப்பில் அமைச்சர்கள் நிமால் ஸ்ரீபால டி சில்வாவும், மங்கள சமரவீர ஆகியோரும் சேர்ந்து கொண்டனர்.

இந்த அரசுக்கு ஆதரவளிப்பதற்கு -

☆ அரசமைப்பை மாற்றுவதற்கு ஜனாதிபதி முன்வைத்திருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை நிறுத்திவைக்க வேண்டும்.

☆ 'தகுதிகாண் அரசின்' காலத்தில் அதிகாரப் பரவலாக்கலோ, விடுதலைப் புலிகளுடன் பேச்சோ இடம்பெறக்கூடாது.

☆ உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும்.

☆ அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைக்கவேண்டும்.

☆ தேர்தல், சட்டம் - ஒழுங்கு (பொலீஸ்), நீதி ஆகியவை உட்பட ஐந்து துறைகளின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக தனித்தனி சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

- என்பது உட்பட பல நிபந்தனைகள் ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

43 அமைச்சர்களையும், 33 பிரதி அமைச்சர்களையும் கொண்டுள்ள தமது அரசின் அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைக்க நேற்றைய பேச்சுக்களின் போது ஜனாதிபதி இணங்கியதாகக் கூறப்படுகின்றது.

பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டால் நாடாளுமன்றத்தை உடன் கூட்டவும், சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்யவும் அரசுத்தரப்பு ஒப்புக்கொண்டதாகத் தெரிகின்றது.

ஐந்து துறைகளில், மூன்று துறைகள் தொடர்பாக சுதந்திர ஆணைக் குழுக்கள் அமைக்க அரசுத்தரப்பு இணங்கியதாகவும் - ஏனைய இரு துறைகள் தொடர்பாகவும் விரிவாகப் பேச்சை நடத்திய பின்னர் முடிவு செய்யலாம் என்றும் -

அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இந்த ஆலோசனைகள் தொடர்பாக ஜே.வி.பியின் பிரதிபலிப்பு என்னவென்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை. (உ-3-4)

---

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)

காரைநகர் பயிரிக் கூடலைப் பிறப்பிடமாகவும், 581, கே.கே.எஸ். வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்) நேற்று (31-08-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்ஷனர் வலுப்பிள்ளை செல்லப்பா - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான முருகநம்பு - விசாலாட்சியின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சண்முகராசா (பிரதம எழுதுவினைஞர், யாழ்.மாநகரசபை பாதுகாப்பு சுகாதார பொறியியற்பிரிவு), கமலாதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வல்லிபுரம் (ஓய்வுபெற்ற கணக்காய்வுப் பரிசோதகர்), நேசரத்தினம் (B.A. - எழுதுவினைஞர் சமூகநலசேவை திணைக்களம், யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம், சுந்தரேஸ்வரன், இராசம்மா, பரமசிவம், ஈஸ்வரி, சரஸ்வதி, வள்ளியம்மை, உமாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-09-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுத் தவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*581, கே.கே.எஸ். வீதி.*
*யாழ்ப்பாணம்.*
(91808)

தகவல்:
சு.மகேஸ்வரி
(மனைவி)

## ஆப்கானிஸ்தானில் பெருந்தொகையான மதுபானம் அழிப்பு

காபூல்,செப்.1

ஆப்கானிஸ்தானில் உள்ள பெரிய ஹோட்டல்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான மதுபானப் போத்தல்களை ஆப்கன் பொலீஸார் தேடிக் கண்டுபிடித்து அழித்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பின்னர் இஸ்லாத்துக்கு விரோதமானது எனத் தெரிவித்து மதுபாவனை தடைசெய்யப்பட்டது.

இதனை அடுத்து பெரிய ஹோட்டல்களின் முதலாளிகள் தம்வசம் இருந்த மதுபானங்களை நிலத்தில் புதைத்து மறைத்து வைத்திருந்தனர்.

இந்த மதுபானப் போத்தல்களே தற்போது ஆப்கன் பொலீஸாரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. (ம-10)

## பெர்னாண்டஸ் இராஜினாமா; தலைவர்கள் ஏற்கமறுப்பு

புதுடில்லி,செப்.1

இந்திய சமதாக் கட்சித் தலைவரும் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தனது நாடாளுமன்றக் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார்.

கட்சியின் முன்னாள் தலைவர் ஜெயா ஜெட்லியின் செயற்பாடுகளை சில மூத்த தலைவர்கள் விமர்சித்ததைத் தொடர்ந்தே பெர்னாண்டஸ் இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கட்சியின் முன்னேற்றம் கருதி பெர்னாண்டஸின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று கட்சியின் மூத்த தலைவர்கள் ஏகமனதாகத் தெரிவித்துள்ளனர். (ம)

## ஈராக் மீது விமானத் தாக்குதல்

பக்தாத்,செப்.1

தென் ஈராக் பகுதியில் அமெரிக்காவின் 'எவ்-16' ரக விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்துத் தெரியவரவில்லை.

அண்மையில் அமெரிக்க உளவு விமானம் ஒன்று ஈராக்கினால் சுட்டு வீழ்த்தப்பட்டதற்குப் பதிலடியாக இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

## கிழக்குத் திமோரில் தேர்தல்

டிலி,செப்.1

கிழக்குத் திமோர் சுதந்திரமடைந்த பின்னர் அங்கு நடைபெறும் முதலாவது தேர்தல் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. பெரும் எண்ணிக்கையான கிழக்குத் திமோர் மக்கள் மகிழ்ச்சியுடன் தேர்தல்களில் வாக்களித்தனர்.

காலனித்துவ ஆட்சியாளர்களாலும், இந்தோனேஷிய ஆக்கிரமிப்பாளர்களாலும் தமது சனத்தொகையில் கால்வாசிப் பகுதியை இழந்துவிட்ட கிழக்குத் திமோர் மக்கள் தமது தாயகத்தை ஆளப்போபவர்களைத் தாமே தேர்தெடுப்பது இதுவே முதல் தடவை. (ம-10)

## ஷேக் கஸீனா 5 தொகுதிகளில் போட்டி

டாக்கா,செப்.1

பங்களாதேஷில் அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்தல்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களில் போட்டியிட உள்ள வேட்பாளர்களின் பட்டியல்களை கட்சிகள் வெளியிட்டுள்ளன. பதவி விலகிய அவாமி லீக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஷேக கஸீனா 5 தொகுதிகளில் போட்டியிட உள்ளார். (ம-10)

## பஸ்விபத்தில் 21 பேர் பலி!

புதுடில்லி,செப்.1

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்; 25 பேர் காயமடைந்தனர்.

பாலம் ஒன்றின் வழியே சென்று கொண்டிருந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் வீழ்ந்ததால் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ம-10)

# இனவெறிக்கு எதிரான மாநாடு டேர்பன் நகரில் நேற்று ஆரம்பம்

டேர்பன்,செப்.1

ஐ.நா.ஏற்பாட்டில் நடைபெறும் இனவெறிக்கு எதிரான முதலாவது மாநாடு தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நேற்று ஆரம்பமானது.

உலகில் இனவெறிக்கு எதிராக பல அமைப்புகள் செயற்பட்டு வந்தபோதும் அது தொடர்பாக உலகளாவிய ரீதியில் ஐ.நா.நடத்தும் முதலாவது மாநாடு இதுவாகும்.

இந்த மாநாட்டில் இனவெறி தொடர்பாக ஆராயப்படுவதுடன் இனவெறிக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும், இனங்களுக்கு இடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவது குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

மாநாட்டின் இறுதியில் கூட்டுத் தீர்மான அறிக்கை ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இந்த மாநாட்டில் உலகநாடுகள் அனைத்தினதும் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் இந்தியாவில் உள்ள சாதிப்பாகுபாடு குறித்தும் ஆராயப்படவேண்டும் என்று இந்தியாவில் உள்ள பல தலித் அமைப்புகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் வலியுறுத்தி வந்தன. எனினும் இந்திய அரசு இந்த விடயத்தில் தீவிர எதிர்ப்போக்கைக் கடைப்பிடித்ததால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

இதேவேளை -

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தையும் டேர்பன் மாநாட்டின் கவனத்துக்குக் கொண்டுவர தென்னாபிரிக்காவில் உள்ள தமிழ அமைப்புக்கள் கடும் முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-10)

# ஜெயலலிதாவின் மனுக்கள் மீதான விசாரணைகள் நிறுத்திவைப்பு!

## உச்ச நீதிமன்றம் உத்தரவு

சென்னை,செப்.1

டான்ஸி நிலபேர ஊழல் மற்றும் பிளஸன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கு என்பவற்றில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக் சென்னை தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட 3 மனுக்கள் மீதான விசாரணையை நிறுத்திவைக்குமாறு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழங்கு விசாரணைக்காக அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞராக செயற்பட, சென்னை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டிருந்த கே.வி. வெங்கடபதி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

"ஜெயலலிதாவின் மனு மீதான உயர் நீதிமன்றத்தின் போக்கு பக்கச் சார்பற்றதாக இல்லை. எனவே வழக்கு விசாரணையை வேறு ஒரு நீதிமன்றுக்கு மாற்றவேண்டும்" என்று கே.வி.வெங்கடபதி தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் வெங்கடபதியின் மனுவுக்குப் பதிலளிக்குமாறு தமிழகக் காவல் துறையின் சி.பி.சி.ஐ.டி பிரிவுக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் 'நோட்டீஸ்'களை அனுப்பி வைத்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினால் ஜெயலலிதா நவம்பர் 15 ஆம் திகதிக்கு மேல் பதவியில் நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிடாத ஒருவர் 6 மாத காலமே முதலமைச்சர் பதவி வகிக்கலாம் என்பதால் ஜெயலலிதா அந்த ஆறு மாத காலம் முடிந்ததும் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தாம் மேன்முறையீடு செய்யப் போவதாக அ.தி.மு.க. தெரிவித்துள்ளது.(ம-10)

## ஆஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுகளுக்கு வெளியே நிற்கும்

# கப்பலில் உள்ள அகதிகள் சிலரை நியூஸிலாந்து ஏற்றுக்கொள்ளலாம்!

## அந்த நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

வெலிங்டன்,செப்.1

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு வெளியே கடலில் தரித்து நிற்கும் நோர்வே சரக்குக் கப்பலில் உள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளில் சிலரைத் தமது நாடு அகதிகளாக ஏற்றுக்கொள்ளக் கூடும் என்று நியூஸிலாந்தின் பிரதமர் ஹெலன் கிளார்க் தெரிவித்துள்ளார்.

தமது நாடு குறைந்த சனத்தொகையையும் அகதிகள் கோட்பாட்டையும் கொண்டிருப்பதால், தற்போது நிர்க்கதியாக விடப்பட்டுள்ள நோர்வே கப்பலில் உள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளை தமது நாடு ஏற்றுக்கொள்ளலாம் என்றும் -

கப்பலில் உள்ளவர்கள் குறித்து தனது நாடு என்ன செய்யலாம் என்பது குறித்து ஆஸ்திரேலியாவுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் -

அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும் "இது அவரது சொந்தக் கருத்தாக இருக்கலாம். உத்தியோகபூர்வமாக இந்த விடயத்தில் நியூஸிலாந்து அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை" - என்று அரசுத் தரப்புப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

கிறிஸ்மஸ் தீவுகளுக்கு வெளியே தரித்து நிற்கும் நோர்வே சரக்குக் கப்பலில் இலங்கை, இந்தோனேஷியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 434 சட்டவிரோதக் குடியேற்ற வாசிகள் உள்ளனர்.

இவர்களை ஏற்றுக் கொள்வதற்கு ஆஸ்திரேலியா, நோர்வே, இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் அரசாங்கங்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டன. இந்த நிலையில் நிர்க்கதியாக விடப்பட்டுள்ள அவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று கருத்துத் தெரிவித்த முதல் தலைவர் நியூஸிலாந்துப் பிரதமரே என்பது குறிப்பிடத்தக்கது.

"நியூஸிலாந்து அகதிகள் தொடர்பாக மென்போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. எனினும் சிறு எண்ணிக்கையிலான அகதிகளே வருடாந்தம் நாட்டுக்குள் வருகின்றனர். எனவே ஏனைய நாடுகளும் அகதிகள் விடயத்தில் நியூஸிலாந்தைப் பின்பற்ற வேண்டும்" - என்று பிரதமர் ஹெலன் கிளார்க் தெரிவித்தார். (ம-10)

# த.மா.கா. தலைவராக மூப்பனாரின் மகன்?

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக மூப்பனாரின் மகன் கோவிந்தவாசன் விரைவில் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் மாநிலக் காங்கிரஸின் நிர்வாகச்பைக் கூட்டம் வெகுவிரைவில் கூட்டப்பட உள்ளதாகவும், அந்தக் கூட்டத்தில் மூப்பனாரின் மகன் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து மூப்பனாரும் ப.சிதம்பரமும் தமிழ் மாநிலக் காங்கிரஸை உருவாக்கினர். பின்னர் கருத்து முரண்பாடு காரணமாக ப.சிதம்பரம் த.மா.காவை விட்டு வெளியேறி புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்தார்.

இதனால் த.மா.கா மூப்பனாருக்கு அடுத்தகட்ட தலைவர்களெவரும் இல்லாத நிலையில் தத்தளித்து வருகின்றது. எனவே மூப்பனாரின் மகனை தலைவராக்கி கட்சியின் நிலையை ஸ்திரப்படுத்த த.மா.காவில் மூத்த தலைவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## காஸாவில் 3 பலஸ்தீனர் உயிரிழப்பு

ஜெருசலேம்,செப்.1

காஸாவில் இஸ்ரேலியர்களின் தாக்குதலில் 3 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்; மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

காஸாவில் யூதர்கள் அதிகம் வாழும் பகுதியான ஜலோவில் இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அபுஅலி முஸ்தபாவின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் முஸ்தபாவின் கொலைக்குப் பழிவாங்கப் போவதாகச் சபதம் செய்துள்ளனர். (ம-10)

## மாதவிடாய் நிற்பதை மரபணுக்களே தீர்மானிக்கின்றன

பெண்களுக்கு மாதவிடாய் நிற்பது தொடர்பான விடயம் மரபணுக்கள் மூலமே தீர்மானிக்கப்படுவதாக டச்சு மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாதவிடாய் தொடர்பாக டச்சு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்திய ஆய்விலிருந்து இது தெரியவந்தது. 85 வீதமான பெண்களுக்கு மாதவிடாய் நிற்பது அவர்களில் காணப்படும் மரபணுக்கள் மூலமே தீர்மானிக்கப்படுகிறது என்பது இந்த ஆய்வின் முடிவாகும்.

எனவே ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் நிற்பது, அவரது தாய் அல்லது சகோதரி போலவே நடைபெறும் என்று இந்த ஆய்வை நடத்திய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

குழந்தைப்பேறு, புகைப்பிடித்தல், கருச்சிதைவு என்பனவும் மாதவிடாய் நிற்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

மாதவிடாயைக் கட்டுப்படுத்தும் மரபணுவை தனிமைப்படுத்த விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

## ஆப்கன் படைகளின் தளபதியாக ஒஸாமா பின்லேடன்?

காபூல்,செப்.1

ஆப்கானிஸ்தான் படைகளின் தளபதியாக சர்வதேச பயங்கரவாதியென அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டுள்ள ஒஸாமா பின்லேடன் நியமிக்கப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்தச் செய்தியை தலிபான்கள் உறுதிப்படுத்தவில்லை. (ம)



மஸிடோனியாவில் தீவிரவாதிகள் நேட்டோப் படைகளிடம் தமது ஆயுதங்களை ஒப்படைத்து வருகின்றனர். அல்பேனியத் தீவிரவாதி ஒருவர் ஆர்.பி.ஜி. ஒன்றை ஒப்படைப்பதற்காக எடுத்துச்செல்வதைப் படத்தில் காணலாம். அருகில் நேட்டோப் படைவீரர் ஒருவர் அதனை மிக அவதானமாகக் கவனித்தபடி இருக்கிறார்.

# சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

நாளை காலை 10 மணிக்கு சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு விநாயகப் பெருமான் புஷ்பப்பல்லக்கில் திருவீதியுலா வருகின்ற காட்சியும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை — காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப்பிள்ளையார் கோயில் புனராவர்த்தன — அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஆறாம் திகதி வியாழக்கிழமை காலை 7.34 மணி முதல் 8-9 மணிக்குள் நடைபெற உள்ளது.

மேற்படி கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் பகல் 2 மணி வரையும் பக்தர்கள் விநாயகப் பெருமானுக்கு எண்ணெய்க் காப்புச் சாத்துவார்கள்.

பிரஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ ச. சண்முகராஜேஸ்வரக்குருக்கள் கும்பாபிஷேக கிரியைகளை நடத்துவார். (க–152)

★ ★ ★

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர் வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை உறியடி உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும் மதியம் அன்னதானம் வழங்கப்படும். (க–72)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தேர் உற்சவம் இன்று சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க–9-72)

★ ★ ★

இணுவில் விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயில் அம்மன் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும். (க–9)

★ ★ ★

ஏழாலை ஞானவைரவப் பெருமான் ஆலய மண்டல மஞ்சனி அபிஷேகப் பூர்த்தி விழாவில் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு 108 சங்காபிஷேகமும் தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் மாலை 5 மணிக்கு சுவாமி திருவீதி உலாவும் இடம்பெறும். (க–9)

★ ★ ★

யாழ். மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலயத்தில் இன்று சனி மாலை 6 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் திரு வீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

வீதியுலாவை அடுத்து 'வள்ளி திருமணம்' என்ற தலைப்பில், யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் வில்லிசையும், இன்னிசை நிகழ்ச்சியும், கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க–15)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீமகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவிருக்கிறது.

நாளை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடி இறக்கல் உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன. (க-3)

## சமய சொற்பொழிவு

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமான் கோயிலில இன்று பிற்பகல் இடம்பெறும் வாராந்த திவ்ய பிரபந்த உரையில் க. மாணிக்கவாசகர் "பேயாழ்வார்" என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (க–3)

## புதிய சி.ஐ.டி. குழு யாழ் வருகிறது

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சார்ஜண்ட் நெவில் கமகே தலைமையிலான புதிய சி. ஐ. டி. குழுவினர் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ். வந்துசேர உள்ளனர்.

இதுவரை விசாரணைகளை மேற்கொண்டு வந்த குழுவினர் தமது விசாரணைகளைப் பூர்த்தி செய்துகொண்டு எதிர்வரும் புதன்கிழமை கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர். (க-9)

## நேர்மையான பஸ் சாரதி நடத்துநர்!

யாழ்ப்பாணத்தில் இருந்து இளவாலைக்குச் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் நேற்றுக்காலை தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க தங்க நகை ஒன்றை அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் உரியவரிடம் கையளித்துள்ளனர்.

இந்த பஸ்ஸில் பயணம் செய்த பயணி ஒருவர் தமது நகை ஒன்றை கைதவறி பஸ்ஸில் விட்டு இறங்கி விட்டார் என்றும்—

பின்னர் வீட்டில் போய் நகையைத் தேடிய சமயம் அது தவறிய விடயம் தெரிய வந்தது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

பின்னர் பிரஸ்தாப பஸ்ஸின் சாரதியைத் தேடிப் பிடித்து விசாரித்து நகையை மீளப்பெற்றுள்ளார்.

அந்த பஸ்ஸின் சாரதியான கந்தையா செல்வராசா, நடத்துநரான நா. மகாலிங்கம் ஆகியோரின் நேர்மையை அந்தப்பயணி பாராட்டியுள்ளார். (க-3)

# 'சிற்றி ஒவ் றிங்கோ' விரைவில் வாரம் 3 சேவைகளை நடத்தும்

## அது பற்றி ஆராய கொழும்பில் கூட்டம்

கொழும்பு, செப். 1

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் வாரத்தில் இரு தடவைகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மேலும் ஒரு சேவையை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள், கப்பல் முகவரின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிரதி அத்தியாவசிய சேவைகள் நாயகமும், திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலருமான வ. வேலும் மயிலும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்து விளக்குவார்.

வாரத்தில் இரு சேவைகள் நடத்துவதால் பயணிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்பட்டுவந்த முறைப்பாடுகளை அடுத்து மூன்றாவது சேவையை ஆரம்பிப்பது குறித்து ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க–3)

## தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி செப். 1

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உப்பு மூடைகளை அடுக்கிக்கொண்டிருந்தவேளையில் தவறிவீழ்ந்தநபர் காலில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வெள்ளையன் பரமகுரு (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-117)


யாழ்ப்பாணம், மணிக்கூட்டு வீதி

அரசடி விநாயகர் ஆலய

அலங்கார உற்சவ பூர்த்திவிழா

அடியார்களே!

இன்று (01 – 09 - 2001) சனிக்கிழமை மாலை விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையின் பின்னர் பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

விசேட கலை நிகழ்ச்சிகள்

பக்திப் பாடல்கள்: செல்வி குவலயா ஸ்ரீதரன் (பக்கவாத்திய சகிதம்)

வில்லிசை: யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் "வள்ளி திருமணம்"

இன்னிசை: யாழ். ஐங்கரன் இசைக் குழுவினரின் "வசந்தராகங்கள்"

குறிப்பு:- விழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(91804) - விநாயக அடியார்கள்.


# புலிகளின் அரசியல்துறை அறிக்கை; பலாலி படைத் தலைமையகம் பதில்

யாழ்ப்பாணம், செப். 1

'யாழ். குடாநாட்டை மிக விரைவில் மீட்கப்போவதாக புலிகள் அறிவிப்பு—அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு' என்றதலைப்பில் கடந்த மாதம் 15 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி குறித்து யாழ். பாதுகாப்புப்படைகளின் தலைமையகம் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

எமது நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர் எனப்பல்வின மக்கள் வசிக்கும் ஒரு நாடாகும். இவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதுடன், சகல மக்களுக்கும் இலங்கை ஒரு பொதுவான நாடாகும். எமது நாட்டில் தென் பகுதியில் வசிக்கும் சிங்கள மக்களுடன் இலட்சக்கணக்கான தமிழ், முஸ்லிம் மக்களும் ஏனைய சமூகத்தினரும் சுமுகமாக வசித்து வருகின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலை எமது நாட்டில காணப்படுகின்ற போதிலும், சிங்கள மக்கள் தமது எதிரிகள் என்பதை பிரசாரம் செய்து யாழ். குடாநாட்டு மக்களைத் தவறான வழியில திசை திருப்புவதற்கு புலிகள் முயற்சிசெய்து வருகின்றனர். குறிப்பாக தென்பகுதியில் தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தைச் சேர்ந்த சிறுபான்மையினரும் எந்த வித பிரச்சினையும் இன்றி வர்த்தகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவேதான் புலிகள் இயக்கத்தினர் யாழ். மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயங்களை புகுத்துவதற்கு முயற்சிசெய்து வருகின்றார்கள் என்பது உங்களுக்கும் தெரியும்.

சுதந்திரமான ஒரு நாட்டின் தமது கருத்துக்களை மற்றவர்களுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில் தெரிவிக்க ஒருவருக்கு சுதந்திரம் உண்டு. ஆனால் அப்படி இல்லாமல் ஓர் ஏகாதிபத்திய தலைவரின் ஆலோசனைக்கும் பலவந்தப்படுத்தலுக்கும் அஞ்சி செயற்படுவது தவறானதாகும். புலிகள் விடுத்துள்ள அறிக்கையின் பிரகாரம் யாழ். குடாநாட்டை புலிகள் மீண்டும் கைப்பற்றினால் புலிகள் இயக்கத்தின் ஏகாதிபத்திய நிர்வாகத்தின் பயங்கரமான சித்திரவதைகளுக்கு நீங்கள் முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

புலிகளின் ஏகாதிபத்திய நிர்வாகத்திற்குள் சிக்கியுள்ள உங்களை மீட்டு உங்களுக்கு தேவையான சுதந்திரம் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கே பாதுகாப்புப் படையினர் என்ற வகையில் நாம் செயற்படுகின்றோம். 1996 ஆம் ஆண்டுக்கு முன் நீங்கள் அனுபவித்த வாழ்க்கைத் தரத்தையும், தற்போது நீங்கள் அனுபவித்து வரும் அமைதியான வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுக்கு அதன் வித்தியாசம் நன்கு விளங்கும்.

நீங்கள் மீண்டும் புலிகள் இயக்கத்தினரின் பிடியில் சிக்கினால் இப்போது அனுபவிக்கும் சுதந்திரமான வாழ்க்கைக்குப் பதிலாக புலிகளின் சர்வாதிகார நிர்வாகத்தின் கீழ் பயங்கரமான ஒரு சூழ்நிலைக்கு முகம் கொடுக்க நேரிடும். உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலமும் இருளாக்கப்படும். எனவே உங்களை ஏமாற்றும் விதத்தில் புலிகள் விடுக்கும் தவறான பிரசாரங்களை கேட்டு ஏமாறாமல் உங்களுடைய முன்னேற்றத்துக்காகவும், குடாநாட்டில் தற்போதுள்ள அமைதியான சுற்றாடலை தக்க வைத்துக்கொள்ளும் முகமாகவும் செயற்பட முன்வாருங்கள்.

நீண்டகாலமாகத் தமது ஏகாதிபத்தியநோக்கங்களுக்கு உடன்பட்டு செயற்பட்டு வரும் நபர்களிடமிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு தேவகிருபை உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.— என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐ)


மரண அறிவித்தல்

முருகர் கார்த்திகேசு

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் கார்த்திகேசு 31-08-2001 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் வேலாயுதம், யோகராணி (கொழும்பு), சிவசுப்பிரமணியம், சிவசேகரம் (அமரர்), ஞானவடிவேல், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, சிவானந்தம் (அமரர்), இராஜேஸ்வரி, ஜெகதீசன் (லண்டன்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), சுமதி, சுமங்கலி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தெய்வானை, கணபதிப்பிள்ளை, நாகேஸ்வரி, மங்களேஸ்வரி, இராசமலர், சுந்தரலிங்கம் (அமரர்), தவராசா (அமரர்), சந்திரன், சரஸ்வதி, கனைநாதன், பாஸ்கரமூர்த்தி, சிறி ஆகியோரின் அன்பு மாமனாரும் கணேசலிங்கம் (சுவிஸ்), கலாரூபன் (ஜேர்மனி), கவிதாஸ் (சுவிஸ்), ரமணதாசன், சுமதா, சுகந்தி (சுவிஸ்), விமலதாசன் (பிரான்ஸ்), சுபாசினி, சிவரூபன், முரளிதரன், ரஞ்சகுமார், ஜெயக்குமார், அனுஷா, சிவரஞ்சினி, வேல்வேந்தன், நிஷாளினி, சர்மிலன், லக்ஷனா, சுபதாஸ், குகதாஸ், சிவகணேஷ், ஞானேஸ்வரன், றோஜினி, சுதாகரன், திவாகரன், வாசுகி (கொழும்பு), கோபிநாத் (கொழும்பு), சுதா, சுகிர்தா, சுகன்யா, வேணுகா, கவிதா, கோவர்த்தனன், வதனி, சுவேதனன், சுசந்திக்கா, லோஜிகீர்த்தனா, வருண், சாருஷன், நிறோஜன், ஜதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (31-08-2001) நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வேலாயுதம் (மகன்)

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(சி/18097)

# உதயன்

## மன்னிக்க முடியாத குற்றம் !

தெற்கு அரசியல் நெருக்கடியில் ஜனாதிபதி இப்போது மேற்கொள்ளக் கூடிய - மேற்கொள்ளவேண்டிய - மூன்று நடவடிக்கைகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பட்டியலிட்டிருக்கின்றார்.

★ அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துவிட்டதால் பெரும்பான்மை கொண்ட எதிரணியை புதிய அரசு அமைப்பதற்கு இடமளித்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். 1994 பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி பெரும்பான்மையை இழந்ததை அடுத்து, ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இந்த நடவடிக்கையைத்தான் தாமதமின்றி மேற்கொண்டார்.

★ அப்படிச் செய்யாவிட்டால், நாடாளுமன்றத்தைக் கூட்டி, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்கவேண்டும்.

★ அதுவும் இல்லையேல் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, பொதுத்தேர்தலை நடத்த முன்வர வேண்டும். நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவை அவர் கோரலாம்.

- இப்படிச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் ரணில்.

இவற்றையெல்லாம் செய்யாமல் விட்டுவிட்டு, தனது ஆட்சியைத் தக்கவைப்பதற்கு பல்வேறு பிரயத்தனங்கள் செய்கின்றார் ஜனாதிபதி.

இதற்காக நேற்றுவரை தனது எதிரி என்று கூறி வந்த விடுதலைப் புலிகளுக்கு நேசக்கரமும் அவர் நீட்டிப் பார்த்தார். அதற்கு நல்ல பதிலை அளித்திருக்கின்றார்கள் புலிகள்.

"தீவிரமடைந்துவரும் அரசியல் நெருக்கடியிலிருந்து சிங்கள மக்களதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தைத் திசை திருப்பும் நோக்கிலேயே இந்த சமாதானத்திற்கான சமிக்ஞை காட்டப்படுகிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து, ஊழலும் சீர்கேடும் மலிந்து, ஆட்டம் காணும் நிலையிலுள்ள இந்த அரசுடன் நாம் பேச்சுகளை நடத்தத் தயாராக இல்லை" - என்று அடித்துக் கூறியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

இந்தப் பேச்சுக்கான அழைப்பை நிராகரித்ததற்கான காரணங்களை வெளியிட்ட அன்ரன் பாலசிங்கம், "எதிர்க்கட்சிக் கூட்டணியிலிருந்து தமிழ்க் கட்சிகளைப் பிளவுபடுத்தும் நோக்குடனேயே அரசு இந்த அரசியல் நாடகத்தை அரங்கேற்ற முனைகின்றது" - என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தமது நிராகரிப்பு அறிவிப்பு மூலம் இந்த நாடகத்துக்குத் துணை போகத் தாங்கள் தயாரில்லை என்பதையும் புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்று கொள்ளலாம்.

அதாவது -

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து, ஊழலும் சீர்கேடும் மலிந்து, ஆட்டம் காணும் நிலையில் உள்ள இந்த அரசுக்கு முண்டு கொடுக்கப்படுவதை புலிகள் அடியோடு விரும்பவில்லை என்பது தெளிவு.

ஈழத்தமிழர்களின் ஒரேயொரு போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தாற் போல செயற்படுவதுதான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

இந்தக் கடமையையும், பொறுப்பையும் அவர்கள் செய்யவிடாது -

அவர்களைப் பொய்யான முறையில் - வேறு அமைப்புகளின் பெயர் குறிப்பிட்டு - மிரட்டி, எதிர்கட்சிக் கூட்டணியிலிருந்து ஒதுங்கவைக்கும் நடவடிக்கையில், ஆயுதக் கும்பல்களோடு துணை சேர்ந்து, சோரம் போவது ஈழத்தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்பதை இத்தகைய நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் ஊடகங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் சக்திகளை அம்பலப்படுத்தாமல், அவர்களின் செயல்களை அங்கீகரித்து, அவர்களோடு இணைந்து செயற்படுவது விடுதலைப் போராட்டத்தில் மன்னிக்க முடியாத குற்றமாகிவிடும் என்பதையும் சம்பந்தப்பட்டோர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## கல்வீட்டு மாமியும் அரிவரி மாமியும்

அப்பொழுது எங்கள் கிராமத்திலுள்ள கல்வீடுகளை ஒருகையால் விரல் விட்டே எண்ணிவிடலாம். வரலாற்றுப் பெருமைமிக்க மட்டக்களப்பு வைத்தியலிங்கம் வீடு என்பது ஒன்று. அது சுற்று மதிலுடன் கூடிய மிகப்பெரிய நாற்சார் வீடு. எங்கள் பாடசாலையும் ஓடுகளால் வேயப்பட்ட கல் கட்டடம்தான்.

இதைவிட எனது மாமா முறை உறவினரின் வீடும் கல்வீடுதான். அதனால் நாங்கள் மாமியைக் கல்வீட்டு மாமி என்றுதான் சொல்லிக்கொள்வோம். அதனையடுத்து அவவின் தாயாரின் வீடு இருந்தது. அவவையும் நாங்கள் மாமி என்றுதான் அழைப்போம்... அதாவது 'அரிவரி மாமி' என்று... அவவின் வீடு தரை, சுவர், தூண்கள் எல்லாம் சீமெந்திலானது என்றாலும் ஓலைக்கூரை...

எங்கள் பாடசாலை கல் கட்டடம் என்றாலும் அதனோடு இணைந்திருந்த அரிவரி, முதல் வகுப்புக்கள் அதற்கு விதிவிலக்காக இருந்தன. கப்புகள் நாட்டி, கிடுகுகளால் வேயப்பட்ட அவ்வகுப்புக்களின் தரையானது செப்பனிடப்படாது கரடு முரடாகத்தான் இருந்தது... இப்பொழுது அரிவரி மாமிக்கு அப்பெயர் வந்த காரணம் உங்களுக்கு தெரிந்திருக்கும் என நினைகிறேன். (என்ன சிரிக்கிறீர்கள்... நாங்கள் அவ்வகுப்புகளில் படித்தபோது சரவணமுத்து வாத்தியாரும் பூமணி வாத்தியாரும், எங்களை முழங்காலில் நிற்கும்படி பணித்தபோது எங்கள் முழங்கால்கள் பட்டவேதனை உங்களுக்கு எங்கே புரியப்போகிறது...? சிரிக்கிறார்களாம்... சிரிப்பு...)

தகுதிகளைப் பொறுத்து அக்கால வீடுகளை முப்பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். கல்வீடுகள் (கொங்கிறீற் அல்ல) பணக்காரர்களுக்குரியன. மண்சுவரிலான கிடுகு வீடுகள் ஏழைகளுக்குரியன. பனையோலை வீடுகள் என்பன நடுத்தர வகுப்பினர்களுக்குரியன. அரிவரி மாமியின் வீடும் பனையோலை வீடுதான்.

கல்வீட்டு மாமிக்கு மேலும் சில பெருமைகள் இருந்தன. மாமா ஓர் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தவர். அப்போது அதுவும் எங்கள் கிராமத்தைப் பொறுத்தவரை அரிய நிகழ்வுதான். முதன் முதல் சைக்கிள் வந்தது, வானொலிப் பெட்டி வந்தது எல்லாமே அந்த வீட்டிலேதான்...




வானொலிப் பெட்டி வந்து அதன் இணைப்பு வேலைகள் நடைபெற்றபோது அதனை வேடிக்கை பார்க்கப் பலர் அங்கு கூடி விட்டனர். இரண்டு பனை மரங்களுக்கிடையே 'ஏரியல' கட்டி வீட்டின் சுவரருகே பைப்தாட்டு 'ஏர்த்' வயர் இணைத்து... அந்த வானொலிப் பெட்டி (PYE) வாய் திறந்த போது... நாமும் வியப்பினால் வாய்திறந்து நின்றோம். அந்த வானொலி கார் பற்றறியால் இயங்கியது. மின் சக்தி குறைந்ததும் அதனைச் 'சாச்' பண்ணக் கொடுத்து விடுவார்கள்... அது திரும்பிவரும்வரை வானொலிக்குக் கட்டாய விடுமுறைதான்...

முதன் முதலாக வெளிநாட்டுக்குப் போனது கூட கல்வீட்டு மாமியின் பிள்ளைகள்தான். அக்காலக் கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் அப்படி ஒரு குறிப்பு (ஆங்கிலத்தில்தான்) இருந்ததாக நினைவு. 'விண்ணப்பகாரர் பத்திரத்தைத் தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யவேண்டும'. பாஸ்போட் பெறுவதற்கே இந்தக் தகுதி என்றால் வெளிநாடு போவதற்கு எத்தனை தகுதிகள் தேவைப்பட்டிருக்கும்...?

அரிவரி மாமியின் கணவரை நாம் சின்னம்மான் என்றுதான் அழைப்போம். அவரிடமும் ஒரு சைக்கிள் இருந்தது. 'ஐயா அதில் ஓடுவதைவிட உருட்டுவதுதான் கூடுதலாக இருக்கும' என்று கல்வீட்டு மாமியின் பிள்ளைகள் கேலிசெய்வதுண்டு. அப்போதெல்லாம் சைக்கிள் ஓடுபவர்கள் பெடலில் இடது காலை மிதித்தவாறு சிறிது தூரம் ஓடித்தான் ஆசனத்தில் அமர்ந்து சவாரி செய்வார்கள். சைக்கிள் ஆசனத்தில் அமர்ந்தவாறே அதனைச் செலுத்தும் வழக்கம் மிகவும் குறைவு. சின்னம்மானோ பெடலுக்குப் பதில் அச்சில் காலைப்பதித்து ஏறித்தான் சைக்கிள் ஓடுவார். இறங்குவதும் அப்படித்தான்.

இதைவிட கல் வீட்டு மாமிவீட்டில் இருந்தது போலவே அரிவரி மாமி வீட்டிலும் அந்த ரோமன் இலக்க - பெண்டுலம் - 'பிக்பென்'சுவர் மணிக்கூடு இருந்தது. (இப்போதும் சில வீடுகளில் காட்சிப் பொருளாக இதுபோன்ற மணிக்கூடுகள் இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள்) இந்த மணிக்கூட்டுக்கு வாரமொருமுறை முகப்புக் கண்ணாடியை திறந்து அதற்கெனவுள்ள சாவியை இரண்டு துவாரங்களிலும் செலுத்தி 'வைன்' கொடுக்கவேண்டும். ஒன்று மணிக்கூடு ஓடுவதற்கும் மற்றது நேரத்துக்கு நேரம் மணியடிப்பதற்குமாகும். இந்த வேலைக்கு சின்னம்மான் என்னைத்தான் கூப்பிடுவார். மரக்கட்டிலில் ஸ்ருலை வைத்து அதற்கு மேல் ஏறி நின்று மணிக்கூட்டுக்குச் சாவி கொடுக்க அவரால் முடியாது. அவர் நேரத்தை மதிப்பவர். சாவி கொடுக்கும் நாளன்று நான் போகத் தாமதமானால் அவரே என்னைத் தேடி வந்து விடுவார். "மணிக்கூட்டுக்குச் சாவி கொடுக்க வேணும்... மணி... ஒருக்கால் வந்திட்டுப்போம் " என்பார்.

அதென்ன மணிக்கூடும் மணியும் என்கிறீர்களா?

எனக்கு அப்படியும் ஒரு (புனை) பெயர் இருந்தது. அது மட்டுமல்ல எனது அப்பாவை 'மணி அப்பா' என்பார்கள். எனது அம்மாவை 'மணி அம்மா' என்பார்கள் இதிலிருந்து நான் அப்போதே எவ்வளவு 'பிரபல'மாக இருந்திருக்கவேண்டும் என்பது உங்களுக்குப் புரிகிறதா?

- சண் அங்கிள்.

## நாட்டு நடப்பு

### வேண்டுவது

*வேண்டுவது எதுவென விளம்பிடு என்று*
*வேழ முகத்தோய் வினவுதிராயின்*
*வேண்டும் வேண்டும் நிம்மதி வேண்டும்*
*நிம்மதி என்பதோ நிரந்தர மாகுதல் வேண்டும்*
*நிரந்தர நிம்மதி நிலைத்திட வேண்டில்*
*பரந்து விரிந்த நம் தாயகமதனை*
*பக்குவமாகவே தந்திடல் வேண்டும்*
*அருந்தமிழ் அன்னையாள் ஆட்சி ஏறிட*
*அனைத்து நீதியும் சரிவரப் பேணியே*
*வன்முறை அற்றதோர் வான்புகழ் ஆட்சியில்*
*இன்புற இளைஞர்கள் ஆட்சி இயற்றுதல் தானே!*

*- விகடகவி.*

## வன்னியில் மருத்துவ முகாம்: ஜயலத் திட்டம்

கொழும்பு,செப்.1

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் வைத்திய சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்காக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா அடுத்த வாரத்தில் அங்கு செல்லவிருக்கின்றார்.

அண்மையில் மடுவுக்குச் சென்று அவர் அங்கு கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தியதுடன், பலருக்கு இலவசமாக கண்ணாடிகளை வழங்கியிருந்தார்.

மீண்டும் அங்கு சென்று வைத்திய முகாம் ஒன்றை நடத்தியிருப்பதாகவும் -

இம்முறை அங்கு ஒருவாரம் தங்கி பாடசாலை மாணவர்கள் மற்றும பொதுமக்களுக்கு கண் பரிசோதனைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் -

ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இதற்காக வன்னி செல்வதற்கான அனுமதியைக் கோரி பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பம் செய்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஒ-3)

## மின்குமிழ் பொருத்திய பட்டத்தால் பரபரப்பு!

### இரத்மலானை விமானத் தளத்தில்

கொழும்பு,செப்.1

இரத்மலானை விமான நிலையத்துக்கு மேலே, எரியும் மின்குமிழ்கள் (பல்ப்) பொருத்தப்பட்ட பட்டம் ஒன்றினால் படையினர் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய் இரவு எட்டுமணியளவில் இடம்பெற்றது.

சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறங்களில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டதைக் கண்ட படையினர் எதிரியின் விமானம் என எண்ணி அங்கும் இங்கும் ஓடியதாகவும் -

அதனைச் சுட்டு வீழ்த்த தயாரானதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து விமானப் படை உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. விமான நிலையத்தைச் சுற்றி காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் அனைவரும் தாக்குதலுக்குத் தயாராகும்படி பணிக்கப்பட்டனர்.

ஆனால் பின்னர் அது ஒரு பட்டம என்பது தெரியவந்தது.

கல்கிசைக் கடற்கரைப் பகுதியில் இருந்து இளைஞர்கள் சிலர் ஏற்றிய பட்டமே அது என்பதை கல்கிசைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். அந்த இளைஞர்கள் மூவரும் கைது செய்யபபட்டனர். (ஐ)

### கோபுரத்தில் மணி ஏற்றும் வைபவம்

கோப்பாய் மத்தி அடப்பந்தாழி வைரவர் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மணிக்கூண்டுக் கோபுரத்தில் மணியேற்றும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறும். (ஐ-72)

## ஆங்கில படிப்புவட்ட கருத்தரங்கு

யாழ்.ஆங்கிலப் படிப்பு வட்டம் தொடராக நடத்தி வரும் கருத்தரங்குகளில் அடுத்த கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'ஜனநாயகமும் நீதித்துறையும்' (Democracy And Judiciary) என்னும் தலைப்பில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் -

'நீதித்துறையின் சுதந்திரம்' என்னும் தலைப்பில் யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவும் -

'சட்ட ஆட்சி' என்னும் தலைப்பில் சட்ட வல்லுநர் எஸ்.கோடீஸ்வரனும் - கருத்துரைகளை வழங்குவர்.

ஆர்வலர்கள் அனைவரும் இக் கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## நாளை

ஆவணி 17
ஞாயிற்றுக்கிழமை
திதி: பூரணை
பின்னிரவு 3.13 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
முற்பகல் 8.14 வரை
உமாமகேஸ்வர விரத நாள்
பூரணை விரதம்
சுபநேரம் : 9.05 - 10.35
ராகுகாலம் : 4.35 - 06.05
(பழைய நேரப்படி)

## காரைநகரில் வகைதொகை இன்றி பயன்தரு மரங்கள் வெட்டி அழிப்பு

காரைநகர்,செப்.1

காரைநகர் பகுதியில் சட்டவிரோதமாக பச்சைமரங்கள் தறிக்கப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு பயன்தரு மரங்கள் பெருமளவில் தினமும் தறிக்கப்பட்டு பொன்னாலை ஊடாக வெளி இடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன.

இதேவேளை -

காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அண்மையில் உள்ள பகுதிகளிலும் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் இப்பகுதிகள் வனாந்தரமாகக் காட்சியளிக்கின்றன. இப்பகுதிகளில் இதுவரை மக்கள் மீளக்குடியமரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-73)

## கல்வியங்காட்டில் நடமாடும் செயலக சேவை

கோப்பாய்,செப்.1


கோப்பாய் பிரதேச செயலகத்தின நடமாடும் சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமை கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இருபாலை, கட்டப்பிராய், கல்வியங்காடு ஆகிய பகுதி மக்கள் வழமையாக செயலகத்தில் இடம் பெறும் சேவைகளை இந்த நடமாடும செயலக சேவை மூலம் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-72)

## உதயவாக்கு

நல்ல மனிதனை ஏன் பார்க்க முடிவதில்லை என்றால் எல்லோருமே அந்த வேடத்தைப் போட்டுக் கொண்டிருப்பதால்தான்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



யுத்தம் நடந்த பிரதேசங்களில்
ஆண்டவன் எழுந்தருளியிருக்கும்
கோயில்களும் விதிவிலக்கல்ல.
அங்கேயும் புதைந்திருக்கும்
பலியெடுக்கும் கொடிய கண்ணிகள்!

# தேரில் உலாவரும் சூர்வடி வேலன்

**தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய இரதோற்சவம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் கோயில்கொண்டு அன்னதானக் கந்தனாகப் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார் ஆறுமுகப் பெருமான். குறக்கொடி வள்ளியைக் கடிமணம்புரிந்தவன். இதற்குச் சான்றாக உற்சவகாலத்தில் வள்ளிக் கொடி இங்கே முளைப்பது வழக்கம். சந்நிதி உற்சவம் பக்திபூர்வமாக நடைபெறும் ஓர் உற்சவம்.

பிரதேச, பொருளாதார, சமூக வேறுபாடுகளை மறந்து வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற புனித ஆலயமாகச் சந்நிதி ஆலயமும் அதன் உற்சவ செயற்பாடுகளும் விளங்கிவருகின்றன. இறைவனால் அருளப்பட்ட வடிவேலைத் தாங்கி பக்தர்களின் துயரத்தைத் துடைக்கிறார் முருகன்.

**வ.மாலினி**
**கரவெட்டி**

இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்துவர தேரில் பவனி வருகிறார் குமரவேள். குறிஞ்சிக் கடவுளான குமரன் தேசுலா செய்ய வரும்போது அன்பர்கள் காவடி எடுத்தும் அங்கப் பிரதட்சனம் செய்தும், கற்பூரச் சட்டி சுமந்தும் தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். பாதாளம், பூமி, ஆகாயம் என்னும் மூன்றையும் குறிப்பிடுவது தேர். நடுத்தட்டைக் குறிக்கும் பூமியிலுள்ள ஜீவராசிகளை வழிநடத்திச் செல்லும் பாதுகாவலனாக முருகப்பெருமான் இருக்கின்றார். மணிகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துவிதானத் தேரில் வள்ளி, தேவயானை சமேதராக ஊர்ந்து திசையெங்கும் நோக்க, பக்தர்கள் கண்பனிக்க அவர் தரிசனம் கண்டு புளகாங்கிதம் அடைவர். தேரின் வடமிழுத்து இடர் நீங்கப் பெறுவர். உலகிலுள்ள அசையும், அசையாப் பொருள்கள் யாவும் சித்திரிக்கப்பட்டுள்ள இந்தச் சித்திரத் தேரின்மேல் வெள்ளிக்குடை நிழற்றுகிறது. இறைவன் தன் அன்பு நிழலில் அடைக்கலம் தரும் தத்துவம் இதனால் வெளிப்படுகின்றது.

கார்மயில் வாகனனாகிய கந்தன் பக்தர்களுக்குள்ளே இருந்து பக்தர்களைக் காக்கின்றான். நாம் வேண்டுவதையும் தருகின்றான் 'வேண்டுவார் வேண்டும் வரம் ஈவான் கண்டாய்' என அப்பரும் பாடுகின்றார். அவன் அருள் எமக்குத் தெரிந்தும் கிடைக்கும், தெரியாமலும் கிடைக்கும். பல துன்பங்களைக் கடந்தபின்னர் நாம் திரும்பிப் பார்த்தால் அவன் அருளாலேதான் நாம் தப்பித்தோம் என்பது தெரியும். துன்பத்தின் சுமை மனத்தில் நெருடும்போது இறைவன்



ஆலயத்துக்குச் சென்று அவனை வழிபட சற்றே மனம் லேசாவதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

பிறவிப் பிணி ஒருபுறமும், நாட்டில் உள்ள அவல வாழ்வு ஒருபுறமும் மக்களை வாட்ட அவர்கள் மனப்பாரத்தை இறக்கும் இடமாக உன் முன்னிலையில் வந்துள்ளனர். தேரிடம் கொண்ட பெருமானுக்கன்றி யாரிடம் அவர்கள் முறையிடுவர்? துரத்தி வரும் துன்பங்களினின்றும் விடுபடவும் மனச்சாந்திபெறவும் ரதத்தில் இருந்துவரும் முருகன் அருள் தருவான். 'நெக்கு நெக்கு உருகுபவர் நெஞ்சத்து புக்கு இருந்து அருள் செய்பவன் குகன்'. ஆகையினால் நாம் அனைவரும் அவன் அருளாலே அவன் கருணையைப்பெற்று இனிது வாழ்வோமாக! ★

---

## பௌர்ணமி கலை விழா

யாழ்ப்பாணம்,செப்.1

உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பௌர்ணமி கலை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஜ-10)

## ஊர்காவற்றுறையில் பனம்விதை நடுகை

காரைநகர்,செப்.1

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனை அபிவிருத்திச் சபை இவ்வாண்டு 25 ஆயிரம் பனம் விதைகளை நடுகைசெய்ய உள்ளது.

காரைநகர் பகுதியில் 7 ஆயிரம் பனை விதைகளும், சுருவில், புளியங்கூடல் பகுதிகளில் 9 ஆயிரம் பனம் விதைகளும் அனலைதீவு எழுவைதீவு, கரம்பொன் பகுதிகளில் தலா மூவாயிரம் பனம் விதைகளும் நடுகை செய்யப்படவுள்ளன.

நடுகை செய்ய உள்ள பனம் விதைகளை அந்தந்தப் பிரதேசங்களிலேயே பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஜ-73)


எமது நிலையத்தின் மூத்த - புகழ்பூத்த நாடகக் கலைஞனும் கவிஞனும் ஸ்ரீலங்கா சாஹித்திய மண்டல நாவற்பரிசுபெற்ற (1968) எழுத்தாளனுமாகிய

கலாபூஷணம் நவாலியூர்

**நா.செல்லத்துரை**



அவர்கள் ஆற்றும் நாடகப் பணியின்

**50ஆவது ஆண்டு நிறைவு நாள்**

**இன்று 2001-09-01**

1951 செப்ரெம்பர் முதலாம் திகதி தொடங்கிய தங்களது நாடகப் பணி, தொடர் சங்கிலியாகி, இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. 2001.06.29 அன்று, யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் தமிழ் விழாவின்போது, மேடையேறிய தங்களது நவீன நாடகமான "குடும்பங்கள் பலவகை இது ஒருவகை" (சமூக சித்திரம்) பலரின் பாராட்டுதல்களையும் வாழ்த்துதல்களையும் பெற்றமைகண்டு பூரித்தோம்.

கண்டி நகரிலும் அதனைச் சுற்றியுள்ள மலைநாட்டுப் பகுதிகளிலும், தங்கள் கைவண்ணத்தில் உருவாகிய நூற்றுக்கணக்கான நாடகங்களுள்,

"கண்டியம்பதிக் காவலன்" - "சிலையெடுத்த சேரன்" - "நீதி கேட்டான் சோழநாட்டான்" - "விதியா? இது சதியா?" (கூனி - கைகேயி - தசரதன் பற்றியது) - "உடன் பிறந்த உணர்ச்சி" (குமணன், அமணன்) - "மயானம் காத்த மன்னன்" (அரிச்சந்திரா - உரைநடைப்பாணி) - போன்ற ஒரு சில சரித்திர - இலக்கிய - புராண நாடகங்களையும, "காத்திருப்பேன் உனக்காக" (1976இல் திரைப்படமானது) - "புதியோர் உலகம்" - "நான் நடந்த பாதையிலே" - "நீ திருந்து உலகம் திருந்தும்" - "எதிர்பாராதது" - "அன்பு இல்லம்" - "பட்ட மரம்" (அனைத்தும் ஓரங்க - ஒரு காட்சி நாடகங்கள்) போன்ற ஒரு சில சமூக நாடகங்களையும் பார்க்கும் வாய்ப்பை, கண்டி நகரைவிட்டு 1984இல் தாங்கள் யாழ். வந்த காலத்திலிருந்து, ஆக்கித் தந்துள்ளீர்கள்.

அது மட்டுமின்றி, காத்தவராயன் பாணியில் அமைந்த "சின்னவனா? பெரியவனா?" சிந்துநடைக் கூத்தை, யாழ்.யாழ்ப்பாணக் கல்லூரி மேடையிலே, தென்இந்தியத் திருச்சபைப் பேராயர் எஸ். ஜெபநேசனின் விருப்புக்கேற்ப, தாங்கள் மேடையேற்றி, அவையிலிருந்த அனைவரையும் விழித்த கண் மூடாது பார்த்துப் பரவசமடைய வைத்தீர்கள். தங்களது இந்தக் கூத்து ஆக்கத்திறனை, அன்றைய மேடையிலே சிறப்பாக மெச்சி உரையாற்றினார் பேராயர் அவர்கள்.

அழகான - தெளிவான - கருத்தாழம்மிக்க - வசனங்களாலும், தொய்வில்லாத - இறுக்கமான - நெறியாள்கையினாலும், எம்மைப் பரவசத்தோடு பார்வையிட வைக்கும் தங்களை, நல்லாசி மாலைகள் சூடி வாழ்த்துகிறோம். சுக பலத்தோடு நீடு வாழ்ந்து, இன்னும் பல வெற்றிப் படைப்புகளை, இம்மண்ணுக்குத் தரவேண்டுமென்று தங்களது 73ஆவது வயதிலும் தாங்கள் ஆற்றிக்கொண்டிருக்கும் தங்கள் நாடகப் பணிக்கு, அலுக்காது சலிக்காது துணைபோய்க் கொண்டிருக்கும் தங்கள் இல்லத் தலைவி திருமதி மகேஸ்வரி செல்லத்துரையையும், ஆரோக்கியமாக வாழ்ந்து, தங்கள் பணிக்கு மேலும் மேலும் துணைபோக வேண்டுமென்று இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்:-*

**நவாலியூர் முரசொலி சனசமூக நிலையத்தினர்.** (915778)



**இலவசம்**

உலகின் எப்பாகத்துக்கும் உறவினர்களின் பிறந்தநாள், திருமண வாழ்த்துக்களை E.MAIL மூலம்தெரிவிக்க

**SRI MURUGAN**

303, K.K.S. ROAD, JAFFNA.

E.MAIL del : Smskr@eureka. lk



**நடன முருகன் வைத்திய நிலையம்**

சத்திரத்துச்சந்தி-யாழ்ப்பாணம்.

பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - 2.00 மணிவரை.
மாலை: 3.30 - 7.00 மணிவரை.

**டாக்டர்.க.நவரத்தினம்**

தொலைபேசி: 021-3635

(91697)


## செல்வபதி ஏகியதைச் செப்பு

தேர்திர்த்த நந்தவனம் தேரடிப் பொங்கலெனப்
பார்த்தநாட் தொட்டு பரமௌன - மீர்த்திடத்
தோற்றுவித்த காரணத்தின் தூய பயனுரைத்துத்
தேற்றி யருளிய தேவு.

அல்ல லறுத்தெமக்கு ஆனந்தம் நித்தமெனும்
நல்லைநகர் நாதன் நகர்ந்தின்று - மெல்லமெல்ல
வல்லை வெளிதாண்டி வாங்கக் கடல்நோக்கும்
செல்வத் தலமமர்ந்தான் சென்று

மலையருவி கண்டநல் மாணிக்க வேலன்
கலையருவி ஊறுநகர் நல்லை - வலஞ்செய்
தலையருவி ஒன்றாம் வடபா லிலங்கும்
தலமமரக் கண்ட தமிழ்

- அங்குசன்.

## வடமாக நான் மாற வேண்டும்

கொடியாக நான் மாறவேண்டும் - முருகன்
கொடியேறும் நாளை நான் பறைசாற்ற வேண்டும்
குடையாக நான் மாற வேண்டும் - எந்தன்
நிழல்மீது வடிவேலன் சுகங்காண வேண்டும்.

மலராக நான் மாற வேண்டும் - கந்தன்
உடல்மீது சரமாகி அசைந்தாட வேண்டும்
சூடமாக நான் மாற வேண்டும் - குமரன்
புகழ் பாடும் தொழிலே என் மூச்சாக வேண்டும்

முரசாக நான் மாற வேண்டும் - எந்தன்
அதிர்வொலியில் அடியார்கள் உருவாட வேண்டும்
வேலாக நான் மாற வேண்டும் - வெவ்
வினையாவும் எனைக்கண்டு வெருண்டோட வேண்டும்

மடமாக நான் மாற வேண்டும் - அறு
சுவையோடு அடியார்கள் பசியாற வேண்டும்
வடமாக நான் மாற வேண்டும் - எந்தன்
ரதம்மீது வடிவேலன் குடியேற வேண்டும்..

- யாழ்.வதிரிவாசன்.

(மெட்டு:- மலராக நான் மாற வேண்டும் என்ற சினிமாப் பாடல்)

## துயரின்றி வாழவழி தாராயோ

கொடியேற்றி திக்கெலாம் கோவில்மணி ஒளிபரப்ப
கூடிவரும் கதிரவனும் கீழ்த்திசையில் ஒளிபரப்ப
அடியவர்கள் நீலக்கடல் அலைநீரில் நீராடி
ஆலயத்தில் உலைநாடி அருளோடு ஆடிவர
படியேறி தட்டினிலே பட்டோடு பால்பழமும்
பக்தியோடு உந்நாமம் பாதம்வரை பாடிவர
விடிவுதனை அருளும் வேலேந்தும் முருகா!
வையகத்தில் துயரின்றி வாழவழி தாராயோ.

- அல்வை கே.ஆர்.திருத்துவராஜா




அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இன்று தேரோடும் சந்நிதி முருகன் நல்லருள்பாலிப்பாராக!

**எண்ணத் தெரிவுகளின் வண்ணக் கலைக்கூடம்**

**நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்**

☎ 3356

23, (58) பெரியகடை, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் எழில்மிகு நவநாகரிகமான புடைவைத் தினிசுகள், கூறைச்சேலை வகைகள் சேட்டிங் - சூட்டிங் சிறுவர்களுக்கான வண்ணவண்ண ஆடைகள் ஆகியவற்றுக்கு கைராசியான ஸ்தாபனம்

**நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்** (91752)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1930 - 10 - 31

மறைவு 2000 - 09 - 12

**திருமதி சின்னையா பரமேஸ்வரி *(ஈஸ்வரி)***

திதி:- 01-09-2001

வருடமொன்று பறந்ததம்மா தன்னாலே - உன்
உருவம் நிறைந்து நிற்கின்றதே எமதிதயந்தன்னில் எந்நாளும்
பரமேஸ்வரி எனும் நாமங்கொண்டாய் பாரினில்
மறையாதம்மா உன் நினைவு நாம் வாழும்வரை.

பிரிவுத் துயரில் வாடும்:
கணவன் - சின்னையா
மகன் - அரியதாஸ்
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(91736)

# கணவனை இழந்த பெண்கள்....

உலகெங்கும் உள்ள சனத்தொகையில் பெண்களின் பெருக்கமானது பெரும் செல்வாக்கைச் செலுத்திவருவது தெரிந்தது ஒன்றே. அதிலும் கணவனை இழந்த பெண்களின் தொகை தற்போது அதிகரித்து வருகிறது.



கடந்த ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவாக கணவனை இழந்த பெண்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது எனப் புள்ளி விவரங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன.

பொதுவாக கீழைத்தேய நாடுகளில் பெண்கள் இரண்டாந்தர பிரஜையாக நோக்கப்படுகின்றனர். அதிலும் 'விதவைகள்' என்ற கணவனை இழந்த பெண்கள் உள்ளத்தாலும், உணர்வாலும், பொருளாதாரத்தாலும் சமூகத்தின் பல்வேறு முகங்களாலும் சொல்லொணாத் துன்பம் அடைகின்றனர்.

## ● கணவனது இழப்பிற்கான காரணங்கள்:-

ஒரு பெண்ணானவள் வேறுபட்ட வயதில், பல்வேறு வழிகளில் கணவனை இழக்க நேரிடலாம். இந்த இழப்பிற்கான காரணங்கள் கீழ் வருவனவற்றில் ஒன்றாக அமையலாம்.

★ நோய் ★ தற்கொலை
★ விபத்து ★ வன்செயல்
★ கொலை

## ● கணவனை இழந்தவர்கள் பற்றிய சமூகத்தினது எண்ணக்கரு:-

எமது சமுதாயத்தின் பார்வையில திருமணமான பெண் சமூகத்தில் தனித்துவமான அந்தஸ்தைப் பெறுகின்றாள். இந்நிலை, கணவனை இழக்கும்போது சமூகத்திலிருந்து பறிக்கப்படுகின்றது.

★ உடன்கட்டை ஏறுதல்.
★ தலையை மொட்டை அடித்தல்.
★ வீட்டின் பின்புறம் வசித்தல்.
★ வெள்ளைப் புடைவை கட்டுதல்.
★ பொட்டிடல் கூடாது.
★ அலங்கரித்தல் கூடாது.
★ வேறுமணம் புரிதல் கூடாது.
★ சுப நிகழ்வுகளில் முன்னிற்றல் கூடாது.

இவை போன்ற கட்டுப்பாடுகளை கணவனை இழந்த பெண்கள் மீது சமூகம் திணித்திருந்தது.

தற்போது போரின் காரணமாக ஏற்பட்ட விதவைகளின் பெருக்கத்தாலும், வெளிநாட்டு கலாசார ஊடுருவலாலும் சமூகத்தின், மன நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

★ உடன்கட்டை ஏறுதல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.
★ தலை மொட்டையடித்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.
★ நிறப் புடைவை அணிதல்.
★ தன்னை அலங்கரித்தல்
★ தத்தமது தேவையின் நிமித்தம் வேலைக்குச் செல்வது.
★ சுப நிகழ்வில் பங்கேற்றல்.
★ மறுமணம் புரிதல்.



இவை போன்ற மாற்றங்களின், காட்டிகள் கணவனை இழந்த பெண்கள் மீதான மாற்றத்திற்குச் சான்றாக அமைகின்றன.

## ● கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:-

கணவனை இழந்த பெண்கள் தனித்து நின்று பல்வேறு பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

★ உள உணர்வுப் பிரச்சினை

கணவர்களது இறப்பின் தன்மைக்கு ஏற்ப மனைவிகளின் உள உணர்வுநிலை வேறுபடும். சாதாரண நாள்பட்ட நோய் நிலையில் இயற்கையாகக் கணவனை இழந்த பெண்களுக்கும், சடுதியாக அல்லது வன்செயலால் கணவனை இழந்த பெண்களுக்கும் இடையே உள்ள உணர்வுகள் வித்தியாசமானவை.


'கணவன் படுத்த படுக்கையாக உள்ளார். அவரின் உடல் சக்திகள் நாளுக்கு நாள் குன்றிய வண்ணம் உள்ளது. உறவினர்கள் அவரைப் பார்க்க வருகின்றனர். அவரின் இறப்பு நிச்சயிக்கப்பட்டது' என்ற நிலையில். உள்ள ஒரு பெண்ணின் உள உணர்வானது எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வை சந்திக்கும் மன உணர்வை ஒத்ததாகவும் சம்பவத்தினது தாக்கம் குறைந்ததாகவும் காணப்படும்.

ஆனால் சடுதியான மரணத்தினால் கணவனை இழந்த பெண்ணினது மனநிலையானது சம்பவத்திற்கு எதிர் விளைவைக் காட்டுவதாகவும் சம்பவத்தை ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் உள உணர்வுக் கொந்தளிப்பு அதிகமானதாகவும் காணப்படும்.

காணாமற்போய் இறந்ததாகக் கருதப்படும் கணவனை இழந்த பெண்களுடைய மன உணர்வானது மேற்கூறப்பட்ட இரு நிலைகளுக்குள்ளும் அடங்காமல் 'இது பொய்' என்றும் சில வேளைகளில் 'நடந்தால்' என்றும் குழப்பத்தோடும் தவிப்போடும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

கணவனின் இழப்பானது ஓர் ஆழமான 'நோவு தரும்' அனுபவம் ஆகையால் பெண் உளப்பாதிப்புககு உள்ளாகின்றாள். கணவனின் இழப்பிற்கு உரிய முழுப்பொறுப்பும் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் உடையதாகக் கருதுகிறாள். 'எனது பலன் இவ்வாறு முடிந்தது' என்றோ, 'நான் அதிர்ஷ்டமில்லாதவள்' என்றோ தன்னைத் தானே உள ரீதியாக சித்திரவதைக்கு உட்படுத்திய வண்ணம் காணப்படுவாள். அதிலும் கணவனின் இறப்பின் முன் அவருக்குரிய கடமைகளைச் செய்ய முடியாதவர்களில், அவரைப் பார்க்க முடியாதவர்கள், சண்டையின் காரணமாகப் பிரிந்திருப்பவர்கள், கணவன் தற்கொலை செய்த மனைவிமார்களில இந்த உளரீதியான சித்திரவதை அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இவர்கள் தம்மைத் தாமே குற்றம் கண்டுபிடித்துக் கொண்டும் தம்மை வெறுத்துக்கொண்டும், தம் மீதான கோபத்தை பிறரில் வெளிப்படுத்திய வண்ணமும் காணப்படுவர்.






**கணவனை இழந்த பெண்களின் வயது வரைவு**

கணவனது இறப்பு நிச்சயிக்கப்பட்டது என்றாலும், திடீரென நிகழ்ந்தாலும், காணாமல் போய் இறந்தாலும் மனைவி முதலில் அதிர்ச்சி நிலைக்கு உட்படுகின்றாள். அதிர்ச்சியின் தன்மையின் வெளிப்பாடானது ஆளுக்கு ஆள் சம்பவத்துக்கு சம்பவம் உறவு நிலையின் தன்மைக்கு ஏற்ப வித்தியாசப்படும். மயங்கிவிழுதல், விறைப்பு நிலை, தற்கொலை முயற்சி, கதறி அழுதல், விழுந்து புரளுதல், வாய் பிதற்றல் போன்ற செயற்பாடுகளைப் பொதுவாக உடன் அவதானிக்கலாம்.

தமக்கு நடந்த இழப்பானது 'பொய்' என்று நம்ப மறுக்கும் தன்மை இவர்களில் காணப்படும். "அவர் இப்பத்தானே சாப்பிட்டுவிட்டுப் போனவர்", "இப்தானே கதைத்து விட்டு வந்தனான்" என உண்மைச் சம்பவத்திற்கு எதிராக சாட்சியங்களைத் திரட்டி சம்பவத்தைப் பொய்யாக்க முயல்வர். அதுமட்டுமன்றி கணவனது இழப்பிற்குரிய காரணங்களைத் தேட முயல்வர். அவரைப் பராமரித்தவர்களில், வைத்தியர்களில், தாதியில், உறவினர்களில், கடவுளில், விதியில், தம்மில் காரணங்களைக் கண்டறிந்து அவர்களைக் குற்றஞ்சாட்ட முனைவர்.


பாதிக்கப்பட்டவர் உடனடியாக மனச்சோர்வுக்கு உள்ளாகிறார். தனது வாழ்வே சூன்யமாகி விட்டது என மூலையில் முடங்கலும் தொடர்ந்து அழுத வண்ணம் காணப்படுதலும் தனது தோற்றத்தைக் கவனியாது இருத்தலும், கோபம் கொள்ளுதலும், வெறுப்பு, எரிச்சல், விரக்தி போன்ற உணர்வுகளை அதிகமாக வெளிகாட்டுவதும் இவர்களில் உடனடியான செயற்பாடுகளாகக் காணக் கூடியதாக உள்ளது. நாள்பட்ட குணங்குறிகளாக நித்திரையின்மை, பசியின்மை, நெஞ்சு நோ, படபடப்பு, பதகளிப்பு, ஆஸ்மா, வயிற்றுப் புண், தலையிடி, தலைச்சுற்று, திடீர் மயக்கம், கைகால் பிடிப்பு போன்ற மெய்ப்பாட்டு நோய்களை இவர்களில் பொதுவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



அத்துடன் இறந்தவரை அடிக்கடி கனவில் தேடமுயல்வதும் அவருடன் வாழ்ந்த நாள்களைப் பற்றி - சம்பவங்களைப் பற்றி - திரும்பத் திரும்பக் கதைப்பதும் கணவனுக்கு நெருக்கமானவர்களை உபசரிப்பதும் அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதும் அவருடைய படத்திற்கு மாலையிடல், தீபம் ஏற்றல், பூவைத்தல் போன்ற செய்கைகளைச் செய்வதும் அவர்களது உளத்தை திருப்திப்படுத்தும் செய்கைகளாக அமைகின்றன.

★ பொருளாதாரப் பிரச்சினை

கணவனை இழந்த பெண்களில் பெரும்பான்மையினர் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். குடும்பத்தலைவனின் பொருளாதாரத்தில் தங்கி இருப்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பொதுவானது ஆகும். குடும்பத் தலைவனை இழக்கும்போது அவரினால் கிடைக்கப்பெற்ற பொருளாதாரமும் குறைவாகவே காணப்படும். இதனால் குடும்பத்தினது பொருளாதார நிலை திடீரென வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் (யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய நிறுவனங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.) இதனால் கணவனை இழந்த பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறும் நிலை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இது மட்டுமன்றி அவர்களது கல்வித் தரம் விளைத்திறன், மூலதனம் இன்மை போன்ற காரணிகளும் அவர்களுடைய வேலை வாய்ப்பைப் பெறுதற்கு தடையாக உள்ள காரணியாகும். எனினும் சில உதவி வழங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசாங்கமும் கணவனை இழந்த பெண்களின் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



கணவனை இழந்த பெண்களின் பொருளாதார வீழ்ச்சிக்கும் அவர்களது விழிப்புணர்வுக் குறைவும், எமது நாட்டில் நடைபெறும் போரின் அனர்த்தம் காரணமாக வீடு, உடைமை, சொத்து, மூலதனம் இழக்கப்படுவதும் அடிக்கடி ஏற்படுகின்ற இடப்பெயர்வு போன்றவையும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. அத்துடன் கணவனுடைய இறபபிற்கு பின்னதாக ஏற்பட்ட மனவலிமை இழப்பும் மிக முக்கிய காரணியாகக் கூறப்படுகின்றது.

## ● நாம் செய்யவேண்டியவை

கணவனை இழந்த பெண்கள் உளத்தாலும், உணர்வாலும், சமூகத்தாலும், பொருளாதாரத்தாலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களை அனுதாபத்தோடு நோக்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல் அவர்களைத் திரும்பவும் சமூகத்துடன் இணைக்க முயலவேண்டும்.

★ கணவனை இழந்த பெண்களின் நிலை பற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

★ அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

★ அவர்களின் தாக்கத்தைப் பற்றி கதைக்க வைத்தல் வேண்டும்.

★ அவற்றை செவிமடுத்தல் வேண்டும்.

★ அவர்களுடைய உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளச் செய்தல் வேண்டும்.

★ அவர்களைப் பாதுகாப்பான முறையில் உளவளத்துணை நடைபெறும் இடங்களுக்கு இட்டுச்செல்லுதல் வேண்டும்.

★ அவர்களுடன் நேரத்தைச் செலவிடுதல் வேண்டும்.

★ அவர்களுடைய வழமையான பணிகளைச் செய்யத் தூண்டுதல் வேண்டும்.

| 1999, 2000 ஆண்டுகளில் | |
|---|---|
| உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் | விதவைகளின் எண்ணிக்கை |
| தெல்லிப்பழை | 505 |
| வேலணை | 540 |
| நெடுந்தீவு | 185 |
| சங்கானை | 1,892 |
| பலாலி | 304 |
| கரவெட்டி | 2,583 |
| பருத்தித்துறை | 2,279 |
| உடுவில் | 1,745 |
| சாவகச்சேரி | 2,228 |
| யாழ்ப்பாணம் | 1,789 |
| நல்லூர் | 2,106 |
| கோப்பாய் | 2,653 |
| மருதங்கேணி | 227 |
| சண்டிலிப்பாய் | 1,423 |
| ஊர்காவற்றுறை | 645 |
| மொத்தம் | 21,104 |

★ இறந்தவர்களைப் பற்றி கதைக்க, அவர்களுக்குரிய கடமைகளைச் செய்ய, இழப்பிற்காக அழ அனுமதித்தல் வேண்டும்.

★ அவர்களில் உள்ள திறன்களை விருத்தி செய்ய பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.



★ சரியான முறையில் எதிர்காலத்தை திட்டமிட உதவுதல் வேண்டும்.

★ உதவி வழங்கும் நிறுவனங்களுடன் இணைத்தல் வேண்டும்.

★ சமூகத்தினால் செய்யக்கூடிய உதவிகளை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்குதல் வேண்டும்.

★ பிரச்சினையில் இருந்து விடுபட விரும்பும், கணவனை இழந்த பெண்களுக்கு உற்சாகமளித்தல் வேண்டும்.

★ சமூகத்தில் பொறுப்புகளைக் கொடுத்தல் வேண்டும்.

இவை போன்றவற்றை நாம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கலாம்.

## ● கணவனை இழந்த பெண்கள் செய்யவேண்டியவை:-

★ உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

★ வாழ்வை சரியான விதத்தில் நோக்கல் வேண்டும்.

★ நாளாந்த நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

★ உதவிகளைச் சரியான விதத்தில் பயன்படுத்தல் வேண்டும்.

★ உணர்வுகளை மேற்கொள்ள விடாமல் உணர்வுகளை கையாளப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

★ இயல்பாக சமூகத்தில் ஓர் அங்கமாக வாழ்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.

★ ஆளுமையைச் சிதைய விடாமல் வளர்க்க முயற்சித்தல்.

*தொகுப்பு:-*

**பெண் உளவளத்துணை இணைப்பாளரும் உளவளத்துணையாளர்களும்.**


எமது சுகவாழ்வு நிலையம்
1997ஆம் ஆண்டு முதல் 'யுனிசெவ்'
ஆதரவுடன் இயங்கி வருகிறது.
சிறுவர்களுக்கும் பெண்களுக்குமான
உளவளத் துணை
இங்கு வழங்கப்படுகிறது.
தொடர்பு:-
514/1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


**வெளியீடு :- 'யுனிசெவ்' ஆதரவுடன் சுகவாழ்வு நிலையம்**

உ



# நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி ஆலய
# இரதோற்சவச் சிறப்பு மலர்

**01.09.2001**

சீரார் நவாலியூர் செய்ய முருகவேள்
தாராரும் தாள்கள் தரிசித்தோர் – ஆரா
அமிழ்தம் பெறுவர் அவனிதனில் வாழ்வர்
தமிழுள் ளளவுந் தழைத்து.

*–திருமுருக கிருபானந்த வாரியார்.*

## ஆறுதலை அருளவே ஆறுமுகனின் இரத பவனி!

ஆன்ம ஈடேற்றத்திற்காகவே ஆலய வழிபாடுகள், உலகிலே பிறந்த மக்களாகிய எமக்கு இன்றியமையாத ஒன்றாகும். நாம் அனைவரும் மானிடராய் பிறந்ததன் நோக்கம் மறுபிறவி என்பதை அறுப்பதற்காகவே. ஆலயங்களிலே மஹோற்சவங்கள் நடைபெறுவது ஆண்டவனின் பஞ்ச கிருத்தியங்களை வெளிப்படுத்துவதற்காகவும், நித்திய பூசைகளில் ஏற்படுகின்ற குறைகளைப் போக்குவதற்காகவுமே ஆகும். இன்றைய தினம் ஆன்மாக்களாகிய மக்களின் ஆணவ மலத்தை நீக்கி அருளைக் கொடுப்பதற்காக அந்திரான் பதி அழகனவன் ஆறிரு தோளனவன் ஆடும் மயிலோடு ஆரோகணம் பண்ணுகின்றான் இரதமதனில், எமது குலதெய்வமாகிய தேவரும், பாவலரும், நாவலரும் போற்றுகின்ற அந்திரான் பதியுறை அழகனாம் மாலோன் மருகன் மன்றாடி மைந்தன் இன்று அழகிய கட்டுத்தேரில் அழகுடன் அமர்ந்து வீதியுலா அருளுகின்றான். இந்த ஆலயத்துக்கு வெகு விரைவில் சித்திரத்தேர் ஒன்றை அமைப்பதற்கு அறங்காவலரும், அடியார்களும் அவன் அருளை நாடி இப்பணியினை மேற்கொண்டுள்ளனர். இப்பணி சிறப்புற்று இனிதே நிறைவுற ஈராறு கரத்தானை இறைஞ்சுவதுடன் அனைவர்க்கும் அவன் பன்னிருவிழிக் கருணையை நல்க நாடுகிறேன் அவன் பாதத்தை.

"சிவாகம கிரியாரத்தினம" ஐ.சோ.கௌரீஸ்வரக்குருக்கள்
(ஆலயப் பிரதமகுரு)



மருதமும் நெய்தலும் ஒருங்கே அமைந்ததும், நவ ஆலயங்களை தன்னகத்தை கொண்டுள்ளமையினால "நவாலி" என்ற காரணப் பெயரை உடையதுமாகிய நவாலிக் கிராமத்தில் நடுநாயகமாக அமைந்து, சிறந்த நிர்வாக அமைப்புடனும், அதிஉத்தம பிராமண உத்தமரால் பூசிக்கப்பட்டு அனைவருக்கும் தனது பேரருள் கருணையினைப் பொழிந்து கொண்டு வீற்றிருப்பதும், தங்கத்தாத்தா எனப் பலராலும் புகழ்ந்து பேசப்படும் சோமசுந்தரப்புலவர் அவர்களால்-

*(1) சோதிவிரி மரகதப் பொற் றூண்கள் நாட்டிச்*
*சுடருமிழும் வயிரமணி விட்டம் பூட்டிச்*
*தீ தகலும் வெண்சரள வடங்கள் பூட்டிச்*
*தேசுமலி செம்பவளப் பலகை மாட்டி*
*ஆதரவா யியற்றுமணி யூஞ்சல் மீதே*
*அம்மைவள்ளி யானையுட னமர்ந்து மேவிக்*
*கோத கற்றும் அந்திரான் பதியில் வாழும்*
*குமரகுரு பரமுருகா ஆடீரூஞ்சல்.*

*(2) வாலைதிரி புரைபுவன பாலா வென்றும்*
*மலமழிக்குங் கனக தண்டைக் காலாவென்றும்*
*நீலமயில் ஆறுமுக முருகா வென்றும்*
*நீடுதுள வணியுமரி மருகா வென்றும்*
*நாலுமறை பேசுமுயர் போதா வென்றும்*
*நல்லடியார் விழைவதருள் தாதா வெனும்*
*கோலமிகு மடியர் தொழும் அந்திரானிற்*
*குமரகுபர முருகா ஆடீரூஞ்சல்.*

இப்படியாக அழகு தமிழில் 1939ம் ஆண்டு திரு ஊஞ்சல் பாடப்பெற்றதுமான அந்திரான் பதி அழகனாம் முருகப் பெருமானுக்கு இன்று இரதோற்சவப் பெருவிழா நடைபெறுகிறது.


## விழா சிறப்புற வாழ்த்துவோர்

**சிறி மாரி நகைமாடம்**
(தங்கப்பவுண் வியாபாரம்)
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**விநாயகா ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர்:- வே.செல்வராசா
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

**ஜெகதா ஹாட்வெயர்ஸ்**
321, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச் சோலை**
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**தணிஸ் ரெக்ஸ்**
மூத்தநயினார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

**சீமாட்டி புடைவைக் கடல்**
15, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**முருகானந்தா சனசமூக நிலையம்**
&
**முருகானந்தா விளையாட்டுக் கழகம்.**

**சமுத்திரா ரேட்ஸ்**
(மீன்பிடி உபகரண மொத்த, சில்லறை விற்பனையாளர்)
141, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**வேல்முருகன் ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர்:- வே.செல்வராசா
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

**சந்திரன் பான்சி பலஸ்**
&
KANNAN COMPUTER TRAINING CENTER
நவாலி றோட், ஆனைக்கோட்டை.
உயரப்புலம் றோட், ஆனைக்கோட்டை.

**அமுதக் கடல்**
(மீன்பிடி உபகரண மொத்த, சில்லறை விற்பனையாளர்)
254 1/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் அமைப்பு:
**நவாலி செய்தியாளர்.**

(C-18067)



## ஞானசம்பந்தர் கலைமன்றம்
## கணனி பயிற்சிநெறி

எமது மன்றத்தின் கணனிப் பயிற்சிநெறிக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 09.09.2001 ஆம் திகதிக்கு முன் ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சிநெறி விவரம்**
**MS OFFICE 2000**

☆ MS WORD 2000
☆ POWER POINT 2000
☆ MS EXCEL 2000
☆ WINDOW OPERATING SYSTEM
☆ MS ACCESS 2000

*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.* (C/18051)

- நிர்வாகம்,
*ஞானசம்பந்தர் கலைமன்றம்.*


### விசேட பஸ் சேவை

காரைநகர்,செப்.1

தொண்டமனாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலய தேர், தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை இன்றும் நாளையும் காரைநகரில் இருந்து ஆலயம் வரை காலை 6மணிமுதல் நேரடி பஸ் சேவையை நடத்த உள்ளதாக காரைநகர் சாலை முகாமையாளர் கே.உருத்திரசுந்தரம் தெரிவித்தார். (ஐ-73)

### கிணறு அமைக்க உதவி

தென்மராட்சி,செப்.1

யாழ்.மாவட்டத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்க கொழும்பிலுள்ள தொழிலதிபர் ஒருவர் முன்வந்துள்ளார். தண்ணீர்ப் பற்றாககுறையுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை அறிவித்துள்ளார். (ம-117)


உ

**வண்ணார்பண்ணை - காட்டுத்துறை**
**ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோயில்**
**மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்.**

**03.09.2001 தொடக்கம் 06.09.2001 வரை**

☆ ஆவணி மாதம் 18ஆம் திகதி (03.09.2001) திங்கட்கிழமை காலை 5.00மணி: கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்.
☆ ஆவணி மாதம் 20ஆம் திகதி (05.09.2001) புதன்கிழமை காலை 5.00மணி:- தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம். காலை 10.00 மணி - பகல் 2.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்.
☆ ஆவணி மாதம் 21ஆம் திகதி (06.09.2001) வியாழக்கிழமை காலை 07.34 - 08.09 மணிக்குள் "மஹா கும்பாபிஷேகம்" - நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு பஞ்சமுகவிநாயகப் பெருமானுக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று தொடர்ந்து வீதிஉலா உற்சவம் இடம்பெறும்.

அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/18046)

- ஆலய அறங்காவலர்கள்.

# ஆன்மீக வழியில் தானும் வாழ்ந்து மற்றோரும் அவ்வழி வாழ ஆற்றுப்படுத்தியவர் ஆத்மஜோதி

**யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா.முத்தையாவின் ஞாபகார்த்த விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஏழாலை மேற்கில் உள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறுகிறது. அதனை ஒட்டி ஆத்ம ஜோதியின் மகத்தான வாழ்வை நினைவு கூருகின்றது இக்கட்டுரை.**

சாமானிய மனிதனும் தர்மத்தைப் பேணும் வகையில் நாளாந்தம் சமைக்கும் போது ஒருபிடி அரிசியைத் தர்மமாகப் போட்டு வைத்து அந்த அரிசியைக் கொண்டு எத்தனையோ தர்மங்களை எமது முன்னோர் நிறைவேற்றி வந்தனர். இத்தர்மமே தனக்கு உயிர்த்துணை என்றும் எண்ணி வாழ்ந்தனர். இதனை உணர்ந்து தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் அவ்வழியில் வாழ ஆற்றுப்படுத்திய பெருமை ஆத்மஜோதியின் வாழ்வில் காணக்கூடியதாக இருந்தது.

சமயமென்பது வெறும் புறக்கிரியைகளோடு நின்று விடக்கூடாது. அது யான் ஆர்? என் உள்ளமார்? என்று எண்ணி எண்ணி இறைவன் திருவருளை நினைந்தபடி சிவார்ப்பணத்தோடு வாழும் உயர் பேற்றைப்பெற அவனருளை நாடுவதாக அமைந்து விட வேண்டும். இதனை யாழ்ப்பாண மண் பெருமையோடு என்றும் பேணி எந்தச் சூழ்நிலையிலும் தமது ஆத்மீக வாழ்வில் இருந்து விலகாது வாழ்ந்து வருகிறது. இந்த உண்மை நெறிவழி திருவருட்துணை கொண்டு நடந்து சாதனை பல செய்தவரே ஆத்மஜோதி ஆவார்.

ஏழாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆத்மஜோதி அவர்கள் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து கொண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். தொழில் முயற்சியில் ஈடுபடுவோர் தானும் தனது குடும்ப நலமும் என வாழ்வதே வழக்கம். ஆத்மஜோதி அத்தகைய வாழ்வை வாழ விரும்பவில்லை. மலைநாட்டுப் பகுதியில் வாழ்ந்த சாமானிய தோட்டத் தொழிலாளர் நல்வாழ்விற்கு தாமேதும் உதவ எண்ணினார். இவர்கள் இன்று உள்ளது போல் அன்றிருக்கவில்லை. சமய, சமூக, பொருளாதார, அரசியல்துறைகளில் மிகவும் தாழ்ந்த நிலையிலே காணப்பட்டனர். இது ஆத்மஜோதியின் நெஞ்சங்களைத் தொட்டது. 'சொந்தச சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை கலங்காரடி கிளியே செய்வதறியாரடி' என்ற பாரதியின் பாடலை உணர்வுபூர்வமாக ஏற்று அவர்களின் துன்பத்தில் தானும் பங்கு கொண்டார். தோட்டம் தோட்டமாகச் சென்று அவர்களின் நல்வாழ்வை உயர்த்த உதவினார். சமய, சமூக, அரசியல் விழிப்புணர்ச்சி பெறக்கூடிய ஓர் உதவேகத்தை அவர்களுக்கு வழங்கினார். ஏழ்மையின் மிகுதியால் தமது படிப்பைத் தொடரமுடியாதவர்களுக்கு படிப்பைத் தொடர ஏற்றவற்றைச் செய்துகொடுத்தார். சுகாதாரச் சீர்கேடுகளைக் களைவதற்கு வைத்திய அதிகாரிகளின் ஆலோசனையையும் அவர்களின் உதவியையும் பெற்றார்.

அந்தவகையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டவர் வரிசையில் முதன்மையானவர் பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) ஆவார்.

பேராசிரியர் நந்தி அவர்கள் ஆத்மஜோதி பற்றிக் குறிப்பிடுகையில் -

அவரது இந்த மக்கள் பணியை 35 வருடங்களாக அவதானித்த பாக்கியம் எனக்குண்டு. 1957ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்றேன். போகும் வழியில் பேராதனையில் எனது சிறிய தந்தையார் பேராசிரியர் வி.செல்வநாயகம் வீட்டில தங்கிய போது அவர் கூறினார், "போனதும் ஆத்மஜோதி முத்தையாவுடன் தொடர்புகொள் உனக்கு வேண்டியது எல்லாம் செய்து தருவார்."

தொடர்பு கொண்டேன்.

அந்தத் தொடர்பின் ஆத்மீகப் பலனை நானன்று உணரவில்லை. இரண்டு வருடங்கள் நாவலப்பிட்டியில் இருந்தேன். முடிவில் குழந்தை வைத்தியத்துறையில் ஆஸ்பத்திரி வார்ட்டின் சுவருக்குள் அடைபட்டு வேலைசெய்ய விரும்பிய எனக்கு, குழந்தை முதல் கிழம் வரை பரந்த சமூக அமைப்பிலும் சுகம் பராமரிப்பதில் நிபுணத்துவம் மட்டுமல்ல ஆன்மீக நிறைவும் சமூக சாதனையும் உண்டென்று உணரவைத்தது. அந்தத தொடர்பில நான் சமுதாய மருத்துவரானேன். நாவல் எழுதும் துறையிலும், ஆத்மீக சிந்தனையிலும் காலெடுத்து வைத்தேன். இப்படியாக ஆத்மஜோதியின் தொடர்பால் வாழ்வில் தனக்கேற்ற பாதை கண்டவர்கள் பலர் இருப்பார்கள். இதை அவர்கள் அறியாமலும் இருப்பார்கள் - என்கிறார். இந்தவகையில் நாவலப்பிட்டியில் பேராசிரியர் நந்தி போன்றவர்களோடு இணைந்து ஆத்மஜோதி மேற்கொண்ட பணிகள் எண்ணிலடங்கா. ஆத்மஜோதி அவர்கள் பெரியார் இராமச்சந்திராவுடன் தொடர்புபட்டு ஆத்மஜோதி அச்சகத்தைப்பெற்று ஆத்மஜோதி சஞ்சிகையை வெளியிட்டு வந்தார். இச் சஞ்சிகை எமது நாட்டில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பெருவரவேற்புப் பெற்றுத் திகழ்ந்தது.

### யோக சுவாமிகளுடன் நெருங்கிப் பழகியவர்

ஆத்மஜோதி அவர்கள் ஈழத்திலுள்ள தவஞானிகளோடும் இந்தியாவிலுள்ள பல தவ சிரேஷ்டர்களோடும் மிகுந்த பக்தியுள்ளவராகக் காணப்பட்டார். நாவலப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்ற போதெல்லாம் ஆத்மஜோதி சிவயோகசுவாமியைச் சந்திக்கத் தவறுவதில்லை. ஒருமுறை சிவயோக சுவாமிகளிடம் தரிசனம் பெறச் செல்லும் போது சுவாமிகளுக்கு ஏதும் கையுறையாகக் கொண்டு செல்லும் வழக்கப்படி ஒரு பையில் முந்திரிகைப் பழத்தை வாங்கித் தனது பையினுள் வைத்துவிட்டு இன்னோர் பை பழத்தை தனது பெற்றோருக்கும் வாங்கிக் கொண்டு சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றாராம். சுவாமிகளை வணங்கிவிட்டு தனது பையிலிருந்த இரு பை முந்திரிகைப் பழத்தில் ஒரு பையை சுவாமிகளிடம கொடுத்தார் ஆத்மஜோதி. சுவாமிகள் பழத்தை வாங்கிவிட்டு 'வீட்டுக்கு வாங்கிய பழத்தை மாறித் தந்துவிட்டாய்' என்றார். ஆத்மஜோதி திகைத்து விட்டார். சுவாமி எல்லாம் ஒன்றுதான் என்று கூறிவிட்டு ஆத்மீக ஞான சிந்தனை மிக்க கருத்துக்களைப் பேசத் தொடங்கினார். இப்படி யோக சுவாமிகளுடன் ஆத்மஜோதி பெற்ற அனுபவங்கள் அநேகம்.

**சி.சக்திகிரீவன்.**

இவ்விதமே ஆத்மஜோதி இந்தியாவிலுள்ள ரமணமகரிஷி, காஞ்சி காமகோடி - பீடாதிபதி, பகவான் சத்தியசாயிபாபா, சுவாமி ராமதாஸ், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர், சிவபாலயோகி போன்றவர்களுடனும் பழகி அரிய ஆத்மீக அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

ஆத்மஜோதி அவர்கள் இலங்கையிலுள்ள பல தலங்களுக்கும் பாத யாத்திரையாகச் சென்று வழிபட்ட பெருமைக்கும் உரியவர். மேலும் இந்தியாவிலுள்ள பல புனித ஸ்தலங்களையும் தரிசித்து பேறு பெற்றவர்.

தனது வாழ்நாளில் சிறந்த சமயப் பேச்சாளராகத் திகழ்ந்து பல சைவ மாநாடுகளிலும், சர்வமத மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றிய பெருமைக்குரியவராவார்.

சிறந்த ஆத்மீக எழுத்தாளரான ஆத்மஜோதி அவர்கள் 15இற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் படிப்போர் உள்ளங்களில் ஆத்மீக உணர்வை வேரூன்ற வைப்பவையாகக் காணப்படுகின்றன.

1983ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற இனக் கலவரத்தின்போது சிங்களக் காடையர்களால் ஆத்மஜோதி நிலையம் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. இதன் பின் தனது பணியை கண்டி வீதி சாவகச்சேரியிலுள்ள 'குருபவனம்' இல்லத்தில் இருந்து மேற்கொண்டு வந்தார்.

இந்தக் காலப்பகுதியில் எமது நாட்டில் நடைபெறும் போர் காரணமாக எமது மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்ப்பதற்காகவும், எமது மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காகவும் நல்லை ஆதீனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்துசமயப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கைதடி சைவச் சிறுவர் இல்லம்

போர் காரணமாக அநாதைகள் ஆக்கப்பட்ட சைவச் சிறுவர்களின் நலன்களைப் பேண கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை இந்து சமயப் பேரவை பொறுப்பேற்று சிறந்த முறையில் நடத்த உதவினார். இவ்வில்லம் போர்ச் சூழல் காரணமாக தென்மராட்சியில் இயங்க முடியாதபோதும் ஏழாலையில் இயங்கி வருகின்றது. இந்து சமயப் பேரவைப் பணியினை விரிவுபடுத்தும் நோக்கில் கனடா, சுவிஸ் போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். இச் சுற்றுப் பயணங்களின் போதெல்லாம் எமது நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டிய அவசியத்தினை வலியுறுத்தி உதவ வைத்தார்.

1994 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டிற்குச் சென்று திரும்பிய ஆத்மஜோதி எமது இந்து சமயப் பேரவை நிர்வாகசபைக் கூட்டத்தில் கலந்து தலைமையுரை ஆற்றுகையில் தனது சுவிஸ் சுற்றுப் பயணம் பற்றி கூறுகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:-

### சுவிஸ் அனுபவம்

யான் சுவிற்சிலாந்திற்குச் சென்ற போது பெற்ற அனுபவத்தை உங்களுக்குக் கூறுகின்றேன். கிட்டத்தட்ட 70 லட்சம் மக்களைக் கொண்ட நாட்டில் 25,000 இலங்கைத் தமிழர்களுக்கு அரசியற் தஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டிற்கு என்றும் நன்றி உள்ளவர்களாகவே இருக்க வேண்டும். ஒன்றரை கோடி மக்களைக் கொண்ட ஸ்ரீலங்கா சுவிற்சிலாந்திடம் இருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. சுவிற்சிலாந்து 26 மாகாணங்களைக் கொண்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் மொழி, சமயம், அரசியல் போன்றவற்றில் சுய சுதந்திரம் வழங்கப்பட்டு இருக்கின்றது. இதனால் அங்குள்ள மக்கள் அமைதியும் சுபீட்சமும் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் எந்தெந்த மொழி பேசும் மக்கள் கூடுதலாகக் காணப்படுகின்றார்களோ அதுவே ஆட்சி மொழியாகவும் உள்ளது. இதனை ஸ்ரீலங்கா நன்கு படித்துக் கொண்டால் எமது நாட்டில் இனப் பிரச்சினைக்கு நல்ல தீர்வாக அமைந்து விடும். இந்த நாட்டில் அநியாயமாகத் தமிழ் இளைஞர்களும் சிங்கள இளைஞர்களும் அழிவதையும், எமது நாட்டுச் சொத்துக்கள் அழிவதையும் தடுத்துவிட முடியும். எமது நாட்டில் நாமும் பிரச்சினைகள் இன்றி சந்தோஷமாக வாழ வழி உண்டாகும் - என்றார்.



ஆத்மஜோதி இந்நாட்டில் எமது மக்கள் நிம்மதி மூச்சுவிட வேண்டும் இதற்காகத் தம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டார்.

1995ஆம் ஆண்டு கனடா நாட்டிற்குச் சென்றவேளை கனடாவில் மொன்றியல் துர்க்கை அம்மன் ஆலயப் பெருவிழாவில் பங்குபற்றச் சென்றிருந்த வேளையில் 08.09.1995 இல் அன்னை அம்பிகையின் திருவடியின் கீழ் அமரத்துவம் பெறும் அரும்பெரும் சீர் பெற்றார்.

---

## கூட்டணியின் பிரதேசக் கிளை கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தெல்லிப்பழை பிரதேச கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

(ஐ-86)

## ரயில் சரக்குக் கட்டணங்கள் ஐந்து மடங்காக அதிகரிப்பு

கொழும்பு,செப்.1

ரயில் சரக்குக் கட்டணங்கள் இன்று முதலாம் திகதி தொடக்கம் 5 மடங்குகளால் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சரக்குக் கட்டணங்களை அதிகரிப்பதற்கான அரச திறைசேரியின் யோசனைக்கு போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அங்கீகாரம் வழங்கியிருக்கிறார்.

இந்தக் கட்டண உயர்வானது இரண்டுவிதமான தரப்படுத்தலின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகிறது.

முதலாவது பிரிவில் ஒரு மெற்றிக் தொன் பொருள்களை ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குக் கொண்டு செல்வதற்கான கட்டணம் 2ரூபா 50சதம் ஆகும். முன்னர் இந்தக் கட்டணம் 50 - 80 சதம் வரையில் இருந்தது.

இரண்டாவது பிரிவில் முன்னர் ஒரு ரூபா 80சதமாக இருந்த ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குக் கொண்டு செல்வதற்கான கட்டணம் 3 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி முன்னர் முதலாவது பிரிவில் ஒரு மெ.தொ. சரக்கை 100 கி.மீ. கொண்டு செல்வதற்கு 50 ரூபா கட்டணமாக அறவிடப்பட்டது. இனி 250 ரூபா அறவிடப்படும்.

முன்னர் 5,000 ரூபாவாக இருந்த சரக்குகளின் போக்குவரத்து கட்டணம் இனி 15,000 ரூபா வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. (ஐ)



**இலங்கை வங்கி ஸ்தாபிக்கப்பட்டு 62 ஆண்டுகள் நிறைவு பெறுவதை ஒட்டிய விழா, அண்மையில் இலங்கை வங்கியின் காரைநகர் கிளையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் எம்.எஸ். வேலாயுதபிள்ளை சிறப்புரையாற்றினார். விழாவில் கலந்துகொண்ட வாடிக்கையாளர்கள், வங்கிப் பணிப்பாளர்களையும் கிளை முகாமையாளர் தா.குகனேசனையும் படத்தில் காணலாம். (ஐ)**

## வாசகர் திருமுகம்

### இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

யுத்த மேகங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழ்ந்துள்ள வேளையிலும் எத்தனையோ இடர்கள், மிரட்டல்களின் மத்தியிலும் தனக்கே உரித்தான நடுநிலை தவறாத பாணியில் வெளிவரும் ஒரேயொரு பத்திரிகை "உதயன்" மட்டுமே என்பது யாவருக்கும் நன்கு தெரிந்த உண்மை. அப்படியானதொரு பத்திரிகையில் அண்மைக்காலமாக சிலரது சுய அரசியல் இலாபத்துக்காக தினமும் வாழ்த்துகின்றோம் என்ற பாணியில் ஒரு விளம்பரம் தொடர்ந்து வந்துகொண்டிருப்பது வேதனைக்குரியதும் வெட்கத்துக்குரியதுமான ஒரு விடயமாகும்.

தேர்தல் காலத்தில்தான் அநேகமாக தேர்தலில் நிற்பவரது படங்களுடன் இத்தகைய விளம்பரங்கள் வருவது வழக்கம். ஆனால் தேர்தலுக்கு முன்பாகவே தம்மை தமது சொந்தப் பணத்தை நிதியுதவியாக வழங்குவது போல் செயற்படும் ஒரு சிலரை இங்குதான் காண்கின்றோம். இது என்ன? தேர்தலுக்கு முற்கூட்டிய ஒத்திகையா?

இதுபற்றி வாசகர் திருமுகத்தில் எத்தனையோ முறை சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் "வாழ்த்துகின்றோம்" விளம்பரம் தொடர்கின்றது. இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

நாம் இன்று யுத்தத்தினால் எத்தனையோ சொத்துக்களை இழந்தாலும் தன்மானம் ஒன்றை இழக்கவில்லை. இப்படிப்பட்டவர்களால் நாம் அதையும் இழக்க நேரிட்டாலும் ஆச்சரியமில்லை.

எனினும் வாழ்த்துவோரிடம் ஒரு வேண்டுகோள் நீங்கள் யாரையும் எப்படியும் எங்கு வேண்டுமானாலும் வாழ்த்துங்கள். ஆனால் புனிதமான தனது பத்திரிகைப்பணியை மேற்கொள்ளும் உதயனை களங்கப்படுத்தாதீர்கள்.

உடுவில். க.சாவித்திரி.

### சுகாதார திணைக்களத்தின் பாராமுகம் ஏன்?

யாழ். மாவட்டத்தில் சட்டத்திற்கு முரணாக - சரியான அனுமதி பெறப்படாத பல மருந்தகங்கள் மக்களின் உயிரோடு விளையாடி வருகின்றன.

இந்த மருந்தகங்கள் மட்டுமல்ல, பல தனியார் ஆயுர்வேத மருந்தகங்களில் ஆங்கில மருந்து விநியோகமும் இடம்பெறுகிறது. இந்த நிலையங்கள் மீது ஏன் சுகாதார திணைக்களம் பாராமுகமாக செயற்படுவதாக இருக்கின்றதோ தெரியவில்லை.

இந்தச் சட்டவிரோத செயல்களுக்கு சுகாதாரத் திணைக்களம் துணை போவதை நிறுத்தி உடனடியாக மருந்தகங்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமா? அல்லது மருந்தகங்களின் கைப்பொம்மையாகி பாராமுகமாக இருக்குமா?

அம்பன். சி.ராசா.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இதோ வெளிவந்துவிட்டது

வழிகாட்டி 2. O/L பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன். தமிழ், கணிதம், வரலாறும் சமூகக் கல்வியும் I, சித்திரம், விஞ்ஞானமும் தொழில் நுட்பமும். அனைத்துப் பாடங்களும் ஒரே நூலில். விலை 55/=. தொடர்புகளுக்கு:- 078-666608. (91745)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் பட்டினத்திற்கு அண்மையில் வீடுகட்டக்கூடிய தோட்டக் காணி ஏறக்குறைய 12 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.பீ. சிவஞானம், சட்டத்தரணி, வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு. (91729)

## வீடு விற்பனைக்கு

2 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- 36/3, புகையிரத ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (91732)

## தவறிவிட்டது

துரைராசா சசிகலா என்பவருடைய தே.அ.அ. (இல.797043451V), வி.அ.அ. (இல.091504532) என்பன சுழிபுரத்துக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆர்.எஸ்.தொலைத் தொடர்பகம், சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (91764)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த மோகனதாசன் லதாவின் தே.அ.அ. (இல.697893814V), வி.அ.அ.(இல.091007569) என்பன 30.08.2001 அன்று யாழ்.கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K.சிவம், தில்லைகட்டி, சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.021-3007, 3019. (91785)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட், சேவல் மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91680)

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (91647)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக கோழிகள், மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1Kg-140/=. முட்டை 6.50. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (91782)

புறொயிலர் இறைச்சிக்கோழி, விராத்துக்குஞ்சு மொத்தமாகவும், சில்லறையாகவும் வேண்டிய நிறையில் தினந்தோறும் பெற்றுக் கொள்ளலாம். குறைந்த விலையில் கிடைக்கும். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (91783)

BROILER இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. கிலோ 140/= மட்டும். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 38/10, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (91775)

புறொயிலர் இறைச்சிக்கோழி, மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து மலிவு விலையில் கொடுக்கப்படும். தொடர்பு: சங்கீத், இல.40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு; இல.55, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (சந்தையருகில்). (91786)

## விற்பனைக்கு

SISIL R - 80 TOSHIBA DOUBLE DOOR குளிர்சாதனப்பெட்டிகள் இரண்டு (Good Condition), பாவித்த மரங்கள், கோழிக்கூட்டு வலைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. ஆனந்தகுமார், இல.11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் வீதிக்கு அருகில்) (91787)

நல்ல நிலையில் உள்ள சுப்பர் கப் - 50, பற்றறி மொடல், 4 கியா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: EESVARA, 316, ஆஸ்பத்திரி வீதி. (From 12.00 to 5P.m.) (C/18080)

நல்ல நிலையிலுள்ள டீசல் ஜெனரேற்றர்-7500 (71/2 k.V) லிஸ்ரர் England, குளிர்சாதனப் பெட்டி Sisil 80, 60, Deep Cold (டபிள் டோர் - இத்தாலி), வோசிங் மெசின் (றையருடன்) National Japan, Air Condition மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பத்மதேவன், உடுவில் றோட், மருதனார்மடம். T.P.070-212584. (91720)

## இலகு திருமண சேவை

1962 பூசம் செவ்வாய்12, கொழும்பில் சொந்தமாகத் துணிவியாபாரம் செய்பவருக்கு அழகான மணப்பெண்ணும்,1961, 1962, 1968, 1969, 1970 Doctorsக்கு மணப்பெண்களும் தேவை. துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (91758)

## விடற்றவன்

சி.வி.வேலுப்பிள்ளையின் விடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும். ஆக்கம்: அராலியூர் நகந்தரம் பிள்ளை க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள், விலை ரூபா 25/=. (91749)

## புதிய வகுப்புக்கள்

எமது நியூ வீணா கானம் இசை மன்றில் மேலைத்தேய, கீழைத்தேய இசை வகுப்புக்களுடன் கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்: 01-09-2001 தொடர்பு: வாககி ரங்கன் 60, வைமன் வீதி, நல்லூர். (91706)

## குளவிகள் தாக்கிய வயோதிபர் மரணம்

தென்மராட்சி,செப்.1

கருங்குளவிகளால் தாக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் மரணமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை வரணி குடமியனில் பனங்காணியூடாக நடந்து வந்த வயோதிபரை மரத்தில் இருந்து வீழ்ந்த கருங்குளவி கூட்டிலிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் மோசமாகத் தாக்கின.

இரவு 7.00 மணி அளவில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் சில மணி நேரத்தில் அங்கு மரணமானார்.

இதே இடத்தைச் சேர்ந்த சரவணமுத்து செல்லையா (வயது -80) என்னும் வயோதிபரே மரணமானவராவார். (ம-117)

## முழு நிலாக் கருத்தரங்கு

பொருள்: "நெருக்கீடுகளுக்கான சாந்த வழிமுறைகள்"
கருத்துரை வழங்குபவர்: திருமதி சாவித்திரிதேவி ரவிச்சந்திரன
(தொழில்நுட்பவியலாளர் உள மருத்துவப் பிரிவு)

காலம்: நாளை (02.09.2001) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 3.30 மணி (இ.நே)
இடம்: "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்

(91776) - இயக்குநர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | விண்ணுலகில் |
|---|---|
| 1980 | 2000 |
| 03 | 09 |
| 07 | 11 |

### அமரர் ஐயாத்துரை அகிலன்

(அஜந்தன்)

*மெல்லவாய் பேசிய நாள்களும் துன்பங்கள் தீர்த்து வைத்து*
*இல்லத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்த நாள்களும் மறக்கமுடியுமா? எம் அகிலனே!*
*எல்லையில்லாத அன்புள்ளம் கொண்டு – இறைபதம் அடைந்த உன்னை*
*சொல்லினாலும் அடக்க முடியாத துயருடன் எம் குடும்பமே பிரிந்து தவிக்குதையா!*

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
மருமகன்: பி.அனுராகன்.

*"இராசாத்தி இல்லம்"*
*பத்தியவத்தை,*
*வதிரி மேற்கு.* (91641)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி சீ.ஸ்ரீகுமாரி அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி புவனேஸ்வரி சீவரத்தினம்

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலவபுரிக் கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(91793)

உ

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

## தேர்த்திருவிழா

இன்று (01.09.2001) சனிக்கிழமை
பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

### விசேட மேளக்கச்சேரி

இணுவில் இராஜன் குழுவினர்
இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்
நாதஸ்வர மேதை வி.கே.கானமூர்த்தி குழுவினர்
நாதஸ்வர கலாநிதி என்.கே.பத்மநாதன் குழுவினர்

அடியார்கள் அனைவரையும் தேர்த்திருவிழா நிகழ்வுகளில் பங்குபற்றி, கருணாகரப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும்வண்ணம், அன்புடன் வேண்டுகின்றோம்.

உபயகாரர்கள்
(தேர்த்திருவிழா)

*கருணாகரப் பிள்ளையார் கோயில்,*
*உரும்பிராய்.* (91778)

## வாழ்த்துகின்றோம்

லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி அதிபர்

### Dr.திருமதி கமலலோஜினி பரமசிவம்

(கோகிலம்) DAMS(HONS)

அவர்கள் 29-08-2001 இல் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்திக் கௌரவிக்கின்றோம். மேலும் அவரது சேவை மேன்மையுற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

சகோதரன்
இரா.உம்பர்கள் சிகாமணி
*(கண்ணன் குடும்பம்)*
சோ.கனகசுந்தரம்
*(4ஆம் வருட சித்த மருத்துவத்துறை)*

*84, தம்பசிட்டி வீதி,*
*பருத்தித்துறை.* (91773)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1935 | 2001 |
| 01 | 07 |
| 21 | 23 |

### திருமதி இராசதுரை சோதிப்பிள்ளை

அன்பான எங்கள்குல தீபமாகி
அன்னையென நாமழைக்கும் தெய்வமாகி
துன்பமதை நாம்மறக்க வேண்டுமென்னும்
துடிப்பாலே உன்னுள் நீ உருகியின்று
நன்றுபெற எமைமறந்து நகுலேச்சரத்து
நாதனடி சேர்ந்தனையோ அம்மா! உந்தன்
பொன்னடிகள் தன்னிலும்மிம் மலரை வைத்தே
போற்றுகின்றோம் ஏற்றருள்வீர் தாயே!

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*கீரிமலை,*
*கொல்லங்கலட்டி,*
*தெல்லிப்பழை.*

தற்காலிக முகவரி:
*மலைவேம்படி,*
*அளவெட்டி மேற்கு,*
*அளவெட்டி.*

(C/18081)

உ

ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹா!

## பூப்புப்புனித நன்னீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித் திங்கள் 17ஆம் நாள் நாளை (02.09.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.05 மணிமுதல் 12.00 மணிவரை வரும் சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது புத்திரி திருவளர்செல்வி **ஜீவிதா** அவர்களுக்கு

பூப்புமங்கல நீராட்டி சுதுசாந்தி செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதகராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இரண்டு நாள் கொண்டாட்டம் இடம்பெறும்)

9, காரைக்கால் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி செ.ஜீவரட்னம் குடும்பத்தினர்.

(91777)

# இந்த வார இராசி பலன்

******

## 2 - 9 - 2001 - 8 - 9 - 2001

| | | | |
|---|---|---|---|
| | | சனி | வி ரா |
| சந் | இராசிச் சக்கரம் | | வெ |
| | | | கு▲ |
| செ கே | | | புத |

**மாற்றம்**

***02 - 09 - 2001 இல் அவிட்டம் 4 கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.***

அரசியலில் பதற்றம். ஆட்சி பீட அபிப்பிராய பேதம், சமாளிக்க முயலும் தலைமைப் பீடம், திடீர் மாற்றம் என்பன ஏற்படும். தேர்தலுக்கு ஆயத்தங்கள் நடக்கும். இந்தியா, மேற்கு உலகம் அபிப்பிராய பேதப்படும். மத்திய கிழக்கில் பல அழிவுகள் ஏற்படும். சில முக்கிய தலைவர்கள் திட்டமிடப்பட்டு படுகொலைகள் செய்யப்பட இடமுண்டு. பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் தொடர்ந்து விட்டு விட்டுப் பல அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனதை எவராலும் இலேசில் அடக்கி ஆள முடியாமல் இருப்பதினாலேயே மனிதர்களுக்குப் பல பிரச்சினைகள் வருவதுபோன்று தொழில்ஸ்தானத்தில் அமைதியாக இராமல் கதைப்பதனால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. கொடுக்கல் வாங்கல் விசாரணை வரை செல்லலாம். தூரதேசச் செய்திகளால் பதற்றநிலை உருவாகும். விரோதிகள் வஞ்சனை செய்வார்கள். மாமன் வழியினருக்கு நல்லதல்ல. வயிற்றில் வாய்வு, நாரிப் பிடிப்பு வரும். காணி பூமியில் செலவுகள் அதிகரிக்கும். மருந்துத்துறை, வியாபாரத் துறை, ஆசிரியத்துறையினர் போன்றவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி.

### இடபம்

மூர்க்கங்கள் கூடும்பொழுது அழிவுகளை எதிர்நோக்க வேண்டிவரும். எனவே இறை நாமங்களைச் சொல்லி சாந்தியடைவதே மேலானது. தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத போட்டிகள், வாக்கு வாதங்கள் வரலாம். குடும்பத்தில் சகோதரர்கள் அல்லது பிள்ளைகளுக்காக ஓடியாடிக் கருமமாற்றியபடி இருப்பீர்கள். எதிர்ப்புக்கள் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. இடாம்பீகப் பொருள்களை வாங்குவீர்கள். கைகால் பிடிப்பு, சல வருத்தம், நெஞ்சுநோ என்பன வரும். சர்ப்புச் சாமான்கள் விற்பனைத் துறை, வங்கித்துறை, செய்தித்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

### மிதுனம்

ஆரவாரம் செய்து ஆர்ப்பரித்துக் தன் காரியங்களைச் சாதித்தாலும் உறவென்ற பாசம் இடைநடுவில் வந்து தடுத்து நிற்கும்மர்மம் என்ன என்று யோசிக்கிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் அமைதியாக இருந்து சாதிக்க முயலுங்கள். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். அரச அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். தாய் வழியினருக்கு நன்மைகள் நடக்கும். கைகால் உரசல் காயங்கள், களைப்பு, திடீர் விபத்து என்பன வர இடமுண்டு. கவனமாகப் பிரயாணங்கள் செய்யவும். மருந்துத்துறை, செய்தித்துறை, பத்திரிகை, புத்தக வியாபாரம், சட்டத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

### கடகம்

என்ன பயம்? இமயமலை வெடித்துச்சிதறிப்போகுமாம், தென்னாடு லெமூரியாக்கண்டமானது போல் இந்தியாவின் வடமுனை வராது என்று சொல்ல முடியாது. விஞ்ஞானிகள் சும்மா சொல்லமாட்டார்கள். ஆனால் இயற்கையின் சீற்றம் திசை மாறும் நிலை உண்டு. விஞ்ஞான அணு உலக மக்களின் அழிவை நோக்காமல்இருந்தால்நன்று. தொழில் ஸ்தானத்தில் பல தரப்பட்ட ஆலோசனைகள் கிடைக்கும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள்வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வருவாய்கள் குறையும். வயிற்று வருத்தம், வாய்வால் பிடிப்பு, சலவருத்தம் என்பன வரும். அரசியல்துறை, சட்டத்துறை, குருத்துறை போன்றவர்களுக்கு மாற்றங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

### சிங்கம்

நாளுக்குநாள் ஒருதுறை முன்னேற வேண்டுமாயின் நிச்சயம் கண்டிப்பு இருந்துதான் ஆகவேண்டும். ஒரு தலைமையில் எதுவும் இயங்கினால்தான் மாற்றங்கள், சிறப்புக்கள் தேடி வரும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். முக்கிய பொறுப்புக்களாலும், அதிக வேலைக் களைப்பாலும் சலிப்பு அடைவீர்கள். பொறுமையாக இருக்கவும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். கண்கூச்சம், காலில் நோ, நாரிப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். குடும்பத்தினர்களுடன் வாக்குக்கலகம் வந்து அமைதியாகும். சட்டத்துறை. கோயில்துறை, வியாபாரத் துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.

### கன்னி

மாற்றங்கள் சுமுகமாகவும் உங்கள் சிரிப்பினால் கருமம் நடக்கவும் ஆக்கங்கள் பலதும் உருவாகும் காலமாகும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும் காலமாகும். தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சி, பொருள்வரவு இருக்கும். சகோதர்கள் அபிப்பிராய பேதப்படுவார்கள். பொருள் செலவுகள் கட்டுமீறும். போக்குவரத்தால் பொருள் இழப்பு, களவுகள் போக இடமுண்டு. சளி, வாதப் பிடிப்பு, மூலநோ, இருமித் தாக்கம் என்பன வரும். இசைத்துறை, ரீ.வி., வீடியோ, குருத்துறை, மின்சாரப்பகுதி, நகைத்துறை, போன்ற துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், புதன், வியாழன். வெள்ளி, சனி.

### துலாம்

நீதியில் உச்சம் கண்டவர். கலைரசனையில் குழந்தை போல்வர் சாமிமுன் நின்று கைகூப்பக் கண்டவர் பலரும் மெச்ச ஓடியே உதவி செய்து வரப்பலன் ஒன்று உங்களுக்கு உண்டு. தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திசைதிருப்பம் வரும். பொறுமை, அமைதி காக்கவும். உங்கள் புத்தி சாதுரியத்தால் பட்டும்,படாமலும் கரும மாற்றி வெற்றி அடைவீர்கள். மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். புத்திரருக்கு சுகயீனம் கொடுக்கலாம். கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலார் மனக் குறைவுப் படுவர். தலைவலி, நரம்புப்பிடிப்பு, வயிற்றுநோ என்பனவரும், நீதித்துறை. பாதுகாப்புத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

மனிதர்கள் ஓர் எல்லை வரைதான் போராட முடிகின்றது. அதற்குமேல் அவர்களால் போராட முடியாமல் விதி தடுக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புவரும். வெற்றிகள் அதிகரிக்கும். உங்களை எவரும் இலகுவில் வெல்ல முடியாது. போராட்டத்தை எதிர்த்துச் சாதனை புரிவீர்கள். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். பாசத்தால் மனவேதனை வரலாம். சலவருத்தம், நெஞ்சுவருத்தம், நாரிநோ, காலில் வருத்தம், கண்நோ, சிரசுவருத்தம் என்பன கொடுக்க இடம்உண்டு. அரசியல்துறை, பாதுகாப்புத் துறை, இரும்புத்துறை, போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### தனுசு

நாம் சாப்பிடும் சாப்பாடு முழுவதும் உடம்பில் ஒட்டுகிறதா? உழைக்கும்உழைப்பை முழுதாக வீட்டுக்குக் கொண்டு போக விடுகிறார்களா? ஏதோ மிஞ்சுவதைச் சேர்த்து ஏதாவது செய்வோம் என்றால் கள்ளர்-சயவர் சொந்தமென்ற பந்தத்தில் வந்து தட்டிப்பறிக்கிறார்கள் என அடிக்கடி சிந்திக்கின்றீர்கள். பொருள வேதனை ஒருபுறம், தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் மறுபுறம். மறைமுக எதிரிகள் உங்களைக் கண்டு ஓடுவர். வீட்டில் செலவுகள் அதிகரிக்கும். தூரத்துச் செய்திகள் மகிழ்ச்சி தரும். கைகால் உளைவு. விட்டு விட்டு மூட்டுநோ, வயிற்றுநோ, வாய்வுத்தொல்லை என்பன வரும். வைத்தியம் முக்கியமாகும். சட்டத்துறை, வியாபாரத்துறை, கோயில் வேலை, நிர்வாகத்துறை, குருத்துறை போன்றவர்களுக்குநன்மைகள்அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### மகரம்

மெல்ல, மெல்ல பொறுத்து பொறுத்து எனக் காலதாமதங்களைக் காட்டிப் பல சந்தர்ப்பங்களை இழந்து விட்டாலும் புதிய துறை உங்களுக்கு வழிகாட்டும். தொழில் ஸ்தானத்தில் புதிய எதிர்பார்ப்புக்கள் உங்களிடமிருந்து வருமா? எனச் சிலர் காத்திருப்பார்கள். பொறுமையாகச் சிரித்துச் சமாளிக்கவும். சகோதரங்களுடன் கலகம் வரும். ஆடை. ஆபரணச்செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகங்கள் ஏற்படும். நரம்பு வருத்தம், மூட்டுநோ, கால் பிடிப்பு, நாரிநோ, தலைவலி என்பன வரும். செய்தித் துறை, நகைத்துறை, போக்குவரத்துத்துறை, தரகுத்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- திங்கள், வியாழன், சனி.

### கும்பம்

உங்கள் பொறுமை மற்றவர்களை ஆச்சரியப்படவைக்கும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வந்து சமாளிப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதம் ஏற்படும். இடமாற்றங்கள் நல்லதல்ல. தூர இடங்களிலிருந்து துக்கச் செய்திகள் வரலாம் வாகனம், பொருள் சிலருக்கு தவற இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். தொண்டைநோ, கால்வீக்கம், மறதி, மூட்டுவலி, நரம்புப் பிடிப்பு என்பனவரும். சாய்ப்புச்சாமான் விற்பனை, ஹோட்டல், வங்கித்துறை, கொம்பியூட்டர், பேப்பர் துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள் ;- திங்கள், வியாழன், சனி.

### மீனம்

தமிழின் இனிமை உலகெல்லாம் பரவுவது போல தமிழர்களின் புலம்பெயர்வு உலகெல்லாம் பரவி அடிதடியில் முடிகின்றதே என்று கலங்குகிறீர்களா? தொழில்ஸ்தானத்திலும் பரவாமல் பொறுமையாக இருக்கவும். வாக்குக்கலகம், படபடப்பு ஏற்படும். அரசஅதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். துக்க செய்திகளால் கலக்கம் வர இடமுண்டு. நரம்புப்பிடிப்பு, மறதி, பித்தவருத்தங்கள், வாய்வுத்தொல்லைகள்வரும். பிரயாணத்துறை, குருத்துறை, மருந்துத்துறை, சட்டத்துறை போன்றதுறையினருக்குமாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்க :- திங்கள். வியாழன். சனி.

மகாதேவா ஜோதிடம்

# தீவகத்தில் 3 பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப். 1

தீவக வலயத்தில் சின்னமடு றோ. க. த. க. பாடசாலை, செட்டிபுலம் அ. த. க. பாடசாலை காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் ஆகியன மீளத்திறக்கப்படவிருப்பதாக தீவக வலயப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலைகளில் கடமையாற்ற விரும்பும் அதிபர் தரங்களைச் சேர்ந்த அல்லது ஆசிரியர் தரம் i, iiஐச் சார்ந்தவர் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் —

விண்ணப்பங்களை தமது பாடசாலை அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் —

அவர் கேட்டுள்ளார்.

(ஐ-3)

# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பப்பிரிவில் ஆண்களையும் சேர்ப்பதற்கு அமைச்சு அனுமதி

பருத்தித்துறை, செப். 1

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை ஆண் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரி 54 வருடங்களுக்கு முன்னர் தம்பசெட்டிப் பகுதியிலுள்ள இந்துக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டு காலம் வரை ஆரம்பப் பிரிவுகளில் ஆண் பிள்ளைகள் கல்வி கற்றார்கள். அண்மைக்காலத்தில் பாடசாலை அதிபர் திணைக்கள சுற்றறிக்கைப்படி ஆண் பிள்ளைகளை ஆரம்ப வகுப்புக்களில் சேர்த்துக் கொள்வதை நிறுத்தியிருந்தார். இதுபற்றி இப்பகுதி பெற்றோர்கள் இணைந்து கல்வி அமைச்சருக்கும் மாகாணக்கல்வி அமைச்சிற்கும் முறைப்பீடுகள் செய்தனர்.

அதன் பயனாக 2002 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1 முதல் இப்பாடசாலையில் தரம் 5 வரை ஆண் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் படி கல்வி அமைச்சர் மாகாண கல்விப் பணிப்பாளருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார். மாகாண கல்விப் பணிப்பாளர் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கும் இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

(ஐ-118)

# ஆஸ்பத்திரிக்குள் பெண்கள் கைகலப்பு

தென்மராட்சி, செப்.1

பருத்தித்துறை மணல்ஒழுங்கைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்களைப் பார்வையிட வந்த ஆறு பெண்கள் மந்திகை ஆஸ்பத்திரி வளவில் கைகலப்பில் ஈடுபட்ட சம்பவம் கடந்த புதனன்று இடம்பெற்றது.

இக் கைகலப்பில் ஈடுபட்ட பெண்களை அங்கு வந்த பொலீஸார் பொது இடங்களில் — அமைதிக்குப் பங்கம் விளைவித்ததற்காகக் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

தாக்குதலை நடத்திய வரைப் பொலீஸாருக்குக் காட்டிக்கொடுத்தது தொடர்பாக எழுந்த வாக்குவாதமே கைகலப்பில் முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**01.09.2001**

HAPPY BIRTHDAY



## செல்வி மகேந்திரராஜா திவ்வியா

உடுவிலைச் சேர்ந்த
மகேந்திரராஜா – பிரியதர்சினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

**திவ்வியா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (01.09.2001) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமன்மார் மற்றும் அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சந்நிதி முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

*டச்சு வீதி,*
*உடுவில்.* (91792)

த.மகேந்திரராஜா (அப்பா)
(மகேந்திரா ஜுவல்ஸ்)

---

## லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

*சித்த கலாசாலை, யாழ்ப்பாணம்.*

**தேவை**

பகுதிநேர விரிவுரையாளர்

*பாடம்:* சல்லிய சாலாக்கியம்
*தகைமை:* D.A.M./D.A.M.S./B.S.M.S. பட்டதாரி
விண்ணப்ப முடிவு திகதி: **15.09.2001**

*127, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (91795)

- பதிவாளர்.

---

## SOMASUNDARAM CRECHE

***22/1 ,SOMASUNDARAM AVENUE,***
***CHUNDIKULI***

Working parents, your child will be Happy and safe in our care. from 8.00 a.m. till you return from work at 5.00 p.m.

Opening Wednesday 5th September. Inquiries at Somasundaram Nursery, 24,Somasundaram Ave.

(91788) **- Supervisor.**

---

## மரண அறிவித்தல்

### திருமதி
### அபிராமிப்பிள்ளை வைத்திலிங்கம்

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம், நடுவுத்துருத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் வசித்தவருமாகிய திருமதி அபிராமிப்பிள்ளை வைத்திலிங்கம் நேற்றுமுன்தினம் (30.08.2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கண்ணையா மற்றும் பாலசிங்கம், காலஞ்சென்ற முத்தம்மா மற்றும் மங்கையர்க்கரசி (ஜேர்மனி), பூமணி, கண்ணம்மா, காலஞ்சென்ற நவமணிதேவி மற்றும் தருமலிங்கம் (பிரான்ஸ்), முத்துலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாக்கியம், சோதிமணி, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பூலோகநாதன், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் முத்துராசா, கோமளா (பிரான்ஸ்), சத்தியபவானி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், கனகசபை (ஆசிரியர்) மற்றும் தம்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் அற்புதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.08.2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புங்குடுதீவு இந்து மணற்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
பிள்ளைகள்:- வை.பாலசிங்கம்,
வை.முத்துலிங்கம்.

*2ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (91772)

---

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் கே.பாரதிராஜாவின் 'முதல் மரியாதை' எனும் திரைப்படம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## திருமுறை பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.1

அகில இலங்கை திருமுறைமன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் திருமுறைப் பெருவிழாவின் இம்மாத நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ஏழாலை இலந்தகட்டி ஸ்ரீபாதாள வைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஆத்மஜோதி முத்தையா ஞாபகார்த்த நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் இடம்பெறும்.

அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், திருமுறைகளுக்கு சோடாசோப பூசை உட்பட பல நிகழ்வுகளும் இந்த விழாவில் இடம்பெறவிருக்கின்றன. (ஐ-3)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

# முழுநிலா நாள் கருத்தரங்கு

*காலம்:* நாளை (02.09.2001)
ஞாயிறு பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)
*இடம்:* **யாழ்.இந்துக் கல்லூரி,**
**குமாரசுவாமி மண்டபம்**
*தலைமை:* **திரு.க.சி.குகதாசன்**
(முன்னாள் அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)
*கருத்துரை:* **"எனது அனுபவங்கள்"**
*வழங்குபவர்:* **லயன் செல்லப்பா நடராசா**
(தினகரன் அலுவலக முன்னாள் பத்திரிகையாளரும், நாடாளுமன்ற இளைப்பாறிய 'ஹன்சார்ட்' அறிக்கையாளரும்)

***அனைவரும் வருக!***

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(C/18090)

*அனுசரணை:-*

**விவேகானந்தா அச்சகம்**

**10,14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

---

உ
ஓம் ஸ்ரீமத் விஸ்வ பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷ® வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் (03-09-2001) திங்கட்கிழமை பகல் 09-28 மணிமுதல் 10-22 மணி வரையுள்ள சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவபாலன் (கண்ணன்)**
(வதனி நகை அகம் உரிமையாளர்,
58A,சின்னக்கடை, பங்சல் வீதி)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சந்திரவதனி (வதனி)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் சிவன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி மு.நாகராசா குடும்பம்**
*தட்டாதெரு, சங்கத்தானை, சாவகச்சேரி.*
தற். முகவரி:
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*

**திரு.திருமதி மு.செல்லத்துரை குடும்பம்**
***102, கண்டி றோட்,***
***கச்சேரி, யாழ்ப்பாணம்***

(இருவீட்டார் அழைப்பு)

(91784)

---

# தேரேறிவரும் சந்நிதி முருகன் அருள்பெற வாழ்த்துகின்றோம்

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக
உங்கள் நன்மதிப்பைப் பெற்றது

# CANNA மார்க் கற்பூரம்

*அன்றும் என்றும்*
அருவமும் உருவமும்
இல்லா இறைவனை
உங்கள் மனதில்
நிலைநிறுத்தி
வைப்பது தரமான
கண்ணா மார்க்
கற்பூரம்




நாடெங்கிலும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள், விநியோகஸ்த்தர்கள்:

**Pushapaa Trading Co**

93/4, Central Road, Colombo 11. Tel : 624588, Fax : 591218.

# மனம் நிறைந்த நன்றிகள்

அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் திருப்பணித் தொண்டிற்கு நிதியுதவி தந்த



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்

வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் உயர்திரு.
**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)** அவர்களுக்கும்

நெல்லியடி ஈ.பி.டி.பி. அமைப்பாளர்
**திரு.ப.ரவீந்திரன் (ராசிக்)** அவர்களுக்கும்

எங்கள் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

- பரிபாலன சபையினர்.

(C/18096)

# நன்றி நவிலல்

அமரர்

## கந்தையா சரவணப்பெருமாள்

(ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர், இரத்மலானை)

எமது இல்லத்தலைவரின் இறுதிக்கிரியைகளிலும் புனித வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகைமூலம் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியவர்களுக்கும் இந்துப்பேரவை செயலாளரின் அனுதாப செய்திகளுக்கும், கடிதமூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் யா/பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் காங்கேசன் சீமெந்து ஆலை ஊழியர்களுக்கும், H.N.D.A. பழைய மாணவர்களுக்கும் மற்றும் இன்று (01.09.2001) ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறவுள்ள ஏழாலை சைவச்சிறுவர் இல்லத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*தலையாழி,*
*கொக்குவில்.*

நிரந்தர முகவரி:
*பாண்மணியம் வீதி,*
*தெல்லிப்பழை.*

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(91807)

# நீங்கா நினைவில் 9 ஆம் ஆண்டு



அமரர்

## இராசையா நவரத்தினம்

(ஆசிரியர் - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக்கல்லூரி)

திதி - 01.09.2001

சந்நிதியான் தேர் வீதி வலம் வரும் நாள்தனிலே அமரத்துவம் அடைந்த எம் குலதெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆராதிக்கின்றோம்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

மனைவி - ந.இந்திராணி,
மகள் - ந.நரேந்திரன்,
மகள் - ந.இந்துஷா.

(C/18093)

## சந்நிதிக்குச் சென்ற காவடிக்கு நேர்ந்த கதி!

யாழ்ப்பாணம்,செப்.1

நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்காக தூக்குக்காவடி எடுத்தவரும் படையினரின் பரிசோதனையில் இருந்து தப்பவில்லை. சுமார் இரு மணித்தியாலத்திற்கு மேல் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர பரிசோதனை நடத்தப்பட்டே காவடி ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

கடந்த இரு தினங்களுக்கு முன் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு காவடி எடுத்துச்சென்ற அச்சுவேலியைச் சேர்ந்த பக்தர் ஒருவருக்கே இக்கதி ஏற்பட்டது.

அச்சுவேலிச் சந்தியில் உள்ள இராணுவத்தினரே காவடியில் சந்தேகம் கொண்டு அதனைத் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

இரு மணித்தியாலங்களுக்குப் பின்பே உண்மைநிலை தெரியவந்தது. காவடி ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டதை அடுத்தே இரண்டு மணிநேர தாமதத்தின்பின் காவடி ஆலயத்தை நோக்கி புறப்பட்டது. (க-15)

## நிரப்பப்படாத உள்ளூராட்சி மன்ற வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் வெற்றிடமாக உள்ள ஆளணிகளை மூன்று மாதத்தில் நிரப்புவதாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் உறுதியளிக்கப்பட்டபோதிலும் இதுவரை எந்தவொரு பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இடம்பெயர் சேவையின்போது வருகைதந்திருந்த உள்ளூராட்சி ஆணையாளரை யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் சந்தித்திருந்தனர். அப்போது உறுதி மொழி வழங்கப்பட்டதாகவும், உள்ளூராட்சி மன்றங்களில் போதிய ஆளணிகள் நிரப்பப்படாததால் சபைகள் பெரும் நிர்வாகச் சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)


**BOND**

**தரம் - 4**

**புலமைப்பரிசில் - 2002**

3ஆவது பரீட்சை நாளை நடைபெறும்.

கடலாடு கவிதை, கானல்வரி தேர்ந்த சிறுகதைகள் (தமிழ்) பெற்றுக்கொள்ளலாம். (91802)

**SHAMROCK**

**A/L 2002 - தமிழ்**

'ஈழத்து இலக்கிய வரலாறு'

sat., sun. - 9 a.m.

**Mr.அருள்**

**அளவையியல் - 02**

***PART II***

mon., wed. 4 p.m.

**Mr.மகிந்தன்** (C/18094)

☆A/L HINDU, CRIS., GEO.
☆Gr. 3 முதல் O/L வரை
☆SPOKEN ENGLISH

**நாகம்ஸ்** கன்னாகம்

மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த

**டும் டும் டும்**

(ரீஸ்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்) (91760)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்று மட்டும்

அஜித், மாளவிகா நடிப்பில்

**உன்னைத்தேடி**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி :- 10.30, 2. 5 (புதிய நேரம்)
(ஞாயிறு மோர்னிங் காட்சிகள் இல்லை)
03.09.2001 முதல்

**முகவரி**

(C/18074)


தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மறைந்த தலைவர்களுமான
**அமரர் வீ.தர்மலிங்கம்** (நா.உ. மானிப்பாய்) அவர்களதும்
**அமரர் மு.ஆலாலசுந்தரம்** (நா.உ. கோப்பாய்) அவர்களதும்

# 16 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம்

இடம் :- இராமநாதன் கல்லூரி மண்டபம்
காலம் :- 02.09.2001 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
தலைவர் :- ச.முத்துலிங்கம்
(முன்னாள் கிராமசபைத் தலைவர், உடுவில்)

அனைவரையும் அழைக்கின்றோம்.

(C/18091) - விழாக்குழு.


# இடம்மாற்ற அறிவித்தல்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் முதலாம் மாடியில் இயங்கி வந்த

**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**

68, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சிவன் கோயில் முன்பாக) எனும் முகவரியில் இன்று முதல் இயங்குகின்றது.

சகலவிதமான ஓவிய, பிளாஸ்ரிக் வேலைகள், பாடசாலை சின்னங்கள், சினிமா சிலைட், கிரெக்ஸ், ஸ்கிறீன் பிரிண்டிங், டிசைன் முதலான எமது வழமையான சேவைகளோடு இன்னும் பல புதிய சேவைகளைப் பெற 10 ஆவது ஆண்டில் உங்களோடு.

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்,
68, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்,
(சிவன் கோயில் முன்பாக) (91803)


# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கியளியாளர் நலன்புரிச் சங்கத்தினால் 31.08.2001 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசுக்குரிய | இல. | :- 2183 |
| இரண்டாம பரிசுக்குரிய | இல. | :- 3771 |
| மூன்றாம் பரிசுக்குரிய | இல. | :- 2123 |

பத்து ஆறுதல் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:

| | |
|---|---|
| 1940 | 5005 |
| 7194 | 3393 |
| 6345 | 3124 |
| 7221 | 2763 |
| 7314 | 7313 |

*தெல்லிப்பழை.* (91800) - நலன்புரிச் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சண்முகம்

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் 114/2, பிறவுண் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகம் (அரசாங்க ஒப்பந்தகாரர்) 30.08.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் அம்பலவாணர், சிவஞானம், சபாநடேசன், சந்திராதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புவனேஸ்வரி, உமாதேவி, ஞானாம்பிகை, மகாதேவன், தர்மராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசம்மா, முத்தையா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவானி, சசிகலா, ஜங்கரன், காயத்திரி, தினேஸ், கஜன், விக்னேஸ்வரன், திவ்வியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.08.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
*114/2, பிறவுண் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (91794)
ச.அம்பலவாணர்
(மகன்)

## கந்தர் விசுவநாதர்

(புலோப்பளை கிராம சபை முன்னாள் உறுப்பினர்)

இடைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் பேராலை, பளையை வதிவிடமாகவும் 16/5, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தர் விசுவநாதர் 30.08.2001 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் இராசம்மா, கனகம்மா, சோதிமலர், சரஸ்வதிப்பிள்ளை, சரோஜினிதேவி (LONDON), ராதிகா (HOLLAND) ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற கனகராசா (நீர்ப்பாசன ஓவசியர்), சந்திரலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், R.D.A.), சுந்தரமூர்த்தி (வவுனியா), சிவானந்தராசா (விவசாயக்கந்தோர், கிளிநொச்சி), அரியதாஸ் (LONDON), காலஞ்சென்ற விஜயராசா ஆகியோரின் மாமனாரும் தாமோதரம்பிள்ளையின் (ஆசிரியர், பளை), அன்பு மைத்துனரும் ராஜராசன் (CANADA), கோகுலராசன் (LONDON), ஸ்ரீகஜன் (வீரகேசரி பத்திரிகையாளர், கொழும்பு), ஸ்ரீதகசன் (LONDON), ஸ்ரீரோபன் (LONDON), ஸ்ரீபிரியா, ஸ்ரீநிமல் (கணிதப்பிரிவு, யாழ்.இந்துக்கல்லூரி), ஸ்ரீஜனனி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), பிரசன்னா (LONDON), சிவாஜினி (COLOMBO), தாரணி (LONDON), டிலானி, கஜரூபன், தர்சன், ரதீஸ் (HOLLAND) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக இல்லத்தில் இன்று (01.09.2001) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/5, சீனியர் லேன்,*
*கலட்டி,*
*யாழ்ப்பாணம்.* (91805)
தகவல்:
ச.ஸ்ரீகஜன்
(பேரன்)

# வாழ்த்துகின்றோம்

ஈழத் தமிழ் அன்னையின்
சுதந்திர உரிமை என்னும் துகிலை உரிய முயலும்
துச்சாதனன்களையும்
அவர்களுக்கு உதவும்
'சகுனி' சுந்தரங்களையும் அம்பலப்படுத்திய
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு. தி.மகேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
சுயநிர்ணய உரிமைக்கான சுதந்திரப் போருக்கு
உங்கள் உதவி தொடரட்டும்.

(C/18098) - *யாழ்.வர்த்தகர்கள்.*


# தமிழர்களைக் கொச்சைப்படுத்தும் செயலுக்குத் துணை போகாதீர்கள்!

## கதிர்காமருக்கு சந்திரசேகரன் கடிதம்

கொழும்பு,செப்.1

இறக்கும் தறுவாயில் உள்ள அரசைக் காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விடயத்தில் ஈடுபடாமல் தாங்கள் மௌனமாக இருப்பதே தமிழர்களுக்காகச் செய்யும் மிகப்பெரும் உதவியாக அமையும்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'புலிகளுடன் பேசுவதற்குத் தயார்' என்று தாங்கள் விடுத்திருக்கும் செய்தியை சர்வதேச ஆதரவினைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களின் அரசு இறுதியாகக் கையாளுகின்ற அரசியல் ஆயுதமாகவே நாம் கருதுகின்றோம்.

நான்கு மாதங்களுக்கு மேலாக புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தம் செய்திருந்தபோது "அரசாங்கம் யுத்தநிறுத்தத்திற்குத் தயாரில்லை" என்ற தங்கள் அரசாங்கத்தின் ஒரே காரணம்தான் சமாதானப் பேச்சுக்களின் கதவுகளை மூடுவதற்குக் காரணமாக இருந்தது.

வெளிவிவகார அமைச்சராக இருக்கும் தங்களுக்கு, அரசின் தீர்க்கதரிசனமற்ற அரசியல் நிலைப்பாட்டினை மாற்றுவதற்கு உங்களுடைய சர்வதேச அரசியல் அனுபவத்தையோ, அரசியல் ஞானத்தையோ பயன்படுத்துகின்ற பலமில்லை அல்லது திராணியில்லை என்பதுதான் வெளிப்பட்டிருக்கின்றது.

தற்போது உங்களுடைய அரசின ஆயுள்காலம் நாள் கணக்கில் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கிறது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்த நேரங்களிலெல்லாம் அழிவைத் தருகின்ற ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலும் யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதிலும் தான் உங்களின் அரசு ஆர்வம் காட்டியது.

சமாதானத்துக்காக இங்கு வந்த நோர்வே நாட்டின் நல்லெண்ணத்தையும் சிதைத்தது தங்களின் அரசாங்கம்தான்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு அரசு நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்ததைப்பற்றி ஆதங்கப்படுகின்ற தாங்கள் ஜே.வி.பியுடனோ அல்லது ஐ.தே.கவுடனோ பேசும்போது - இனப்பிரச்சினை தொடர்பாகவோ அல்லது யுத்தம் தொடர்பாகவோ அவர்களிடம் எந்தவிதமான நிலைப்பாட்டையுமே, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வைக்கவில்லை என்பதனை மறுப்பீர்களா?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கவும், ஜே.வி.பியும் சேர்ந்து இனப்பிரச்சினையையும், யுத்தத்தையும் உதாசீனப்படுத்திவிட்டு பதவிகளைப்பற்றியும் நாடாளுமன்ற ஆயுள் காலத்தைப் பற்றியும் மட்டும்தான் அக்கறை காட்டியது வெளிப்படையான உண்மையாகும்.

சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்தினை சேர்ந்தவராகப் பெயரளவில் மட்டும், உலகத் தமிழர்கள் உங்களை நினைப்பார்கள். ஆனால் தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் அரசியல் எதிர்காலத்துக்காக எப்போதாவது நீங்கள் குரல் கொடுத்திருக்கிறீர்களா? அல்லது தங்களின் அரசாங்கத்திடம் யதார்த்தமான அரசியல் ஆலோசனைகளை எப்போதாவது வலியுறுத்தியிருக்கின்றீர்களா?

இந்த நிலையில் புலிகளுடன் பேச்சு என்று தாங்கள் சொல்வது ஏழு வருடங்களாக ஜனாதிபதி பேசிய பேச்சின் ஒலிபெருக்கியாக அமைந்துள்ளதாகவே மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது - என்றுள்ளது. (ஐ-3)


## கம்பியூட்டர் பயிலவிருக்கும் மாணவர்களுக்கு முழுக்கட்டணத்தில் 50% கழிவு

| DIPLOMA COURSES | PERIOD (MONTH) | USUAL FEE | 50% FEE |
|---|---|---|---|
| DIP. IN MICROSOFT OFFICE XP | 6 | 6,000/= | 3,000/= |
| DIP. IN SOFTWARE ENGINEERING | 12 | 21,750/= | 10,875/= |
| DIP. IN WINDOWS APPLICATION | 7 | 7,750/= | 3,875/= |
| DIP. IN DESKTOP PUBLISHING | 4 | 5,250/= | 2,625/= |
| DIP. IN COMPUTER PROGRAMMING | 9 | 8,750/= | 4,375/= |

புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 09.09.2001 (10.00 a.m.)
*மேலதிக விவரங்களுக்கு:*

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No. 07, Palaly Road,
Jaffna.
(C/18095)


## இலங்கைக்கு ஜப்பான் கடனுதவி

இலங்கைக்கு 33பில்லியன் ரூபாவைக் கடனாக வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

உலக நாடுகளில் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடன் ஜப்பான் மேற்கொள்ளும் கடன் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த உதவித் தொகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## மறைந்த எழுத்தாளர்களின் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.1

அண்மையில் காலமான தமிழ் எழுத்தாளர்கள் மூவரின் நினைவு அஞ்சலிக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் செம்பியன் செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அண்மையில் காலமான செ.சி. பரமேஸ்வரன், துரை.சுப்பிரமணியன், பா.சத்தியசீலன் ஆகியோர் நினைவாகவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


எழுத்தாளர் 'சிற்பி' சிவசரவணபவன், க.தணிகாசலம், நவாலியூர் நடேசன் ஆகியோர் அஞ்சலி உரைகளை வழங்குவர். (ஐ-9)


To become a computer professional.........join at IIS

# Computer Courses

New Batches Start on : 09/09/2001 Sunday at 10.00 am

| பாடநெறி | காலம் (மாதங்கள்) | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | 5 | 8,000/= | 1,000/= |
| Diploma in Internet Technology | 4 | 6,000/= | 1,500/= |
| Diploma in Java Programming | 6 | 4,000/= | 2,000/= |
| Diploma in Visual Basic Programming | 5 | 3,500/= | 500/= |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 | 3,500/= | 1,000/= |
| Diploma in Computer Programming | 8 | 10,000/= | 2,500/= |
| Technician Diploma in Computer Hardware | 6 | 7,000/= | 1,500/= |
| Advanced Diploma in Applied Computer Science | 12 | 25,000/= | 10,000/= |



புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைகளில் தோற்றாமலேயே நம்ப முடியாத கட்டணச் சலுகையில் நவீன கணனி, தகவல் தொழில்நுட்ப பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள IIS நிறுவனம் வாய்ப்பளிக்கின்றது.

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!

*ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான நிறுவனம்*

I I S

# Institute of Informatics Studies

Head Office :
100, Clock Tower Road, Jaffna. ☎ 021-2831 Email : iis@sltnet.lk
Branches : Nelliyady Karaveddy. Main Street, Chankanai.



A/L எடுத்தவர்களுக்கான புதிய ஆங்கில வகுப்புகள்

ஆரம்பம்:- 07.09.2001

OXFORD ENGLISH ACADEMY
By:- Mr.B.JOTHY

☆ நெல்லியடியில்:- 8a.m.
அனுமதியை
MATHS CETRE
இல் பெற்றுக்கொள்ளவும்.
☆ பருத்தித்துறையில்:- 10 a.m.
பத்திரகாளி கோயில் வீதி,
பஸ் நிலையம் அருகில்.

(அனுமதிப்பத்திரங்களை
முன்கூட்டியே
அலுவலகத்தில் பெறவும்.) (91447)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.